மனித உரிமைகள் பற்றிய

உலக அறிவிப்பு

AHB 1076

234

ஒரு சிறப்பான சாதனை

ஐக்கிய நாடுகள், நியூயார்க்

VI:5
N60;1
108840

மனித உரிமைகள்
பற்றிய
உலக அறிவிப்பு

சிறந்ததொரு
சாதனை

ஐக்கிய நாடுகள் தகவலறிவிப்பு இலாகாவின் காரியாலயம்
வெளியிட்டது.

பொருளடக்கம்

முகவுரை 4

1. உலக அறிவிப்பின் பொருள் 5

2. அறிவிப்பின் செல்வாக்கு 20

அனுபந்தம்: அறிவிப்பின் வாசகம் 36

முகவுரை

பத்து ஆண்டுகளுக்கு முன் அதாவது 1948 டிசம்பர் பத்தாந் தேதி யன்று ஐக்கிய நாடுகளின் மகா சபை மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பை ஏற்றுக் கொண்டு, 'எல்லா மக்களுக்கும் நாடுகளுக்கும் பொருந்துவதான சாதனைத்தரத்தை இது காட்டுகிறது' என்று கருத்துத் தெரிவித்தது.

இந்த பத்தாண்டுகளில் இந்த உலக அறிவிப்பு நல்ல சக்தியாக வளர்ந்து தனி தேசங்களிலும் தேசங்களின் கூட்டுக்களிலும் சுயேச்சை யான வகையில் தனது செல்வாக்கைப் பரப்பி, பணி செய்து வருகிறது. ஜீவன் மிகுந்ததொரு உயர் தஸ்தாவேஜாகிவிட்ட இது வருங்காலத்தில் மேலும் சக்தி மிக்கதாய் விளங்கக் கூடும்.

இந்த உலக அறிவிப்பிற்கு பத்து ஆண்டு நிறைவடையும் சமயம் இச் சிறு நூல் வெளியிடப்படுகிறது. உலகில் உள்ள ஆண்களும் பெண் களும் இந்த அறிவிப்பை மேலும் உணர்ந்து கொள்ளச் செய்வதற்கான ஐக்கிய நாடுகள் முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்நூல் பிரசுரமாகிறது. உலகில் உள்ள ஆண்களும் பெண்களும் தமக்குற்ற உரிமைகளை உணர்ந்து கொண்டு, மற்றவர்களது உரிமைகளை மதிக்கவும் முற்படு வார்கள் என்று நம்பப்படுகிறது.

I

உலக அறிவிப்பின் பொருள்

ஐக்கிய நாடுகள் ''அடிப்படை மனித உரிமைகளிலும் மனித கண்ணியத்திலும் மதிப்பிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை அளிப்பதிலும் சிறு நாடுகளும் பெரும் நாடுகளும் சம உரிமை கொண்டிருத்தலிலும்'' தனக்குள்ள நம்பிக்கையை அறிவிப்பில் உறுதிபடுத்தியிருக்கிறது. 'இனம், மதம், பால், மொழி ஆகிய வேறுபாடின்றி மக்கள் அனைவருக்கும் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் கிட்டும்படிச் செய்து அவற்றை எல்லோரும் மதித்து நடக்கும்படிச் செய்ய ஊக்கமளிப்பது' என்ற அடிப்படையில் சர்வ தேசக் கூட்டுறவை வளர்ப்பதும் ஐக்கிய நாடுகளின் நிறுவனத்திற்கு ஒரு காரணமாகும். ஒவ்வொரு அங்க நாடும் தனியாகவும் கூட்டாகவும் இந்த நோக்கத்தை ஈடேற்றுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக உறுதி கூறியுள்ளன.

1945-ல் இந்த அறிவிப்பு சான்பிரான்ஸிஸ்கோவில் வரையப்பட்ட சமயம் சர்வ தேச உரிமைப் பட்டயம் ஒன்றும் வரையப்பட வேண்டும் என்பதற்கென யோசனைகள் பல இருந்தன. பின்னர் ஐக்கிய நாடுகள் நிறுவியானதும் அது மனித உரிமைகள் பற்றிய கமிஷன் ஒன்றை நியமனஞ் செய்தது. உரிமைப் பட்டயம் ஒன்றை வரைந்து கொடுப்பது அதன் முதல் அலுவலாயிருந்தது. அந்த பட்டயம் மூன்று பகுதிகளாக இருக்க வேண்டுமென்று கமிஷன் நிச்சயித்தது. அவையாவன:— (1) மனித உரிமை அறிவிப்பு (2) மனித உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் (3) உரிமைகளின் அமுல் விவரம். அறிவிப்பு என்பது மனித உரிமைகளின் பொதுவான தரங்களை விவரிக்கும்; குறிப்பான உரிமைகளை விவரணஞ்செய்து அவற்றுக்கு வரம்பு விதிப்பது ஒப்பந்தங்களாகும்; பட்டயத்து ஷரத்துக்கள் நிறைவேறி வருவதை மேற்பார்வையிடுவதற்கென சர்வதேச ஸ்தாபனம் ஒன்றை நிறுவ வகை செய்வது அமுல் விவரங்களாகும்.

அறிவிப்பின் முதலாவது வாசகத்தை கமிஷன் 1947-லிலும் 1948-லும் தயாரித்தது; இறுதி வாசகத்தை[2] மகாசபை 1948 டிசம்பர் 10-ந் தேதியன்று ஏற்றுக் கொண்டது.

---

1 ஒரு ஒப்பந்தத்திற்கு பதிலாக இரு ஒப்பந்தங்கள் இருக்க வேண்டும் என்று மகாசபை தீர்மானித்திருக்கிறது. சிவில் அரசியல் உரிமைகள் பற்றி ஒன்றும் பொருளாதார சமூக கலாசார உரிமைகள் பற்றி ஒன்றுமாக இரண்டு இருக்க வேண்டுமென்று நிச்சயமாயிற்று இந்த ஒப்பந்தம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அமல் நடவடிக்கைகள் உண்டு. இந் நூல் தயாராகும் சமயம் அந்த ஒப்பந்தங்கள் மகாசபையின் பரிசீலனையிலிருந்து வருகின்றன.

2 அறிவிப்பின் வாசகம் அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது; அடுத்து வரும் பக்கங்களில் அறிவிப்பின் ஷரத்துக்கள் சில விளக்கப்படுகின்றன.

இந்த அறிவிப்பில் மொத்தம் முப்பது ஷரத்துக்கள் உள்ளன; முதல் இரண்டும் கடைசி மூன்றும் பொதுப்படையானவை. அறிவிப்பில் காணும் உரிமைகள் அனைத்தின் விஷயத்திலும் அவை பொருந்தும். அறிவிப்பின் பெரும் பகுதி விரிவாகச் சொல்லப்போனால் இரு வகை உரிமைகளைப் பற்றியவை எனப் பிரிக்கலாம். மூன்றாவது ஷரத்தி லிருந்து இருபத்தி ஒன்றாவது ஷரத்து வரை தனி நபர் உரிமைகள், சிவில் அரசியல் உரிமைகள் பற்றியவை முதல் பிரிவு எனலாம். இருபத்தியிரண்டாவதிலிருந்து இருபத்தியேழாவது வரை பொருளா தார சமூகக் கலாசார உரிமைகள் பற்றியவை இரண்டாவது பிரிவு எனக் கொள்ளலாம்.

பொதுவான கொள்கைகள்

முதலாவது ஷரத்து சில அடிப்படை நெறிகளை விவரிக்கிறது. ''மக் கள் எல்லோரும் பிறப்பாலும் பெருமையாலும் உரிமையாலும் ஒத்த நிலையுடையவர்களே; இயற்கையிலேயே பகுத்தறிவும் மனச் சான்றும் பெற்றுள்ள அவர்கள் ஒருவரோடொருவர் உடற் பிறப்புணர்ச்சியோடு பழகல் வேண்டும்'' என்று முதலாவது ஷரத்துக் கூறுகிறது. இந்த ஷரத்து இரண்டு கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டெழுந்த தெனலாம்:–(1) சுதந்திரமும் சமத்வமும் மனிதனின் பிறப்புரிமை; அது பிரிக்க முடியாததொன்று ஆகும். (2) மனிதன் பூமியில் உள்ள மற்ற ஜீவராசிகளைக் காட்டிலும் வேறுபட்டவன்; மனிதன் பகுத்தறிவு கொண் டவன்; அற நெறிக்குக் கட்டுப்பட்டவன்.

இரண்டாவது ஷரத்து ''உலக அறிவிப்பில் கண்ட உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடமைகளாகும்'' என்று விதிக்கிறது. ''இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கொள்கை அல்லது பிறந்த சமூக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு, வளம், குடிப் பிறப்பு அல்லது பிற வகைச் செல்வாக்கு இவைகளில் ஒன்றையும் கருதாமல் மேற்படி உலக அறிவிப்பில் அடங்கிய எல்லா வகையான உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லோருக் கும் பொதுவுடமைகளாகும்'' என்றும் அது கூறுகிறது. 'இனம், மதம், பால், மொழி ஆகிய வேறுபாடின்றி மக்கள் அனைவருக்கும் மனித உரி மைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் கிட்டும்படிச் செய்து அவற்றை எல்லோரும் மதித்து நடக்கும்படிச் செய்ய ஊக்கமளிப்பது' என்று சாஸ னத்தில் காணப்படும் ஷரத்தின் விரிவுரையே இந்த இரண்டாவது ஷரத்து. ''மேலும் ஒருவருடைய தேசம் அல்லது ஊர் சுதந்திரமுடைய தாயினும் சரி அதன் பரி பூர்ண சுதந்திரத்துக்கு எவ்விதமான கட்டுப் பாடுடையதாயினும் சரி அதனுடைய அரசியல் நிலைமையையேனும்

சர்வதேசீய நிலைமையையேனும் கொண்டு அதன் மக்களிடையே பாகுபாடு செய்யப்பட மாட்டாது.'' சுருங்கக் கூறின், உலக நாடுகள், பிராந்தியங்கள் ஆகியவற்றில் வாழும் மக்கள் அனைவருக்கும் எவ்வகை வேறுபாடுமின்றி, இந்த அறிவிப்பில் காணும் உரிமைகள் அனைத்தும் பொருந்தும்.

தனி நபர் உரிமைகளும் சிவில் அரசியல் உரிமைகளும்

மூன்றாவது ஷரத்திலிருந்து இருபத்தியோராவது ஷரத்து வரையான பகுதி தனி நபர் உரிமைகளையும் சிவில் அரசியல் உரிமைகளையும் விவரிக்கிறது. உலகின் பெரும்பாலான நாடுகளின் அரசியல் சட்டங்களிலும் மற்ற சட்டங்களிலும் ஏற்கப்பட்ட உரிமைகளே இவை.

''ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை விடுதலை உடற் பாதுகாப்பு இவைகளில் உரிமையுண்டு'' என்று மூன்றாவது ஷரத்து கூறுகிறது. தனி நபர் உரிமைகளுக்கே இது மிக அடிப்படையானதெனச் சொல்லலாம். அடுத்து வரும் இரண்டு ஷரத்துக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது இது. ''எவரும் அடிமைத் தனத்திலேயோ அல்லது ஆட்பணியிலோ ஆழ்த்தப்படார்'' என்று நான்காவது ஷரத்தும், ''எவரும் சித்திரவதை அல்லது கொடிய கண்ணற்ற இழிந்த நடத்தைக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படுத்தப்படார்'' என்று ஐந்தாவது ஷரத்தும் கூறுகின்றன. அடிமைத்தனமோ ஆட்பணியோ எவ்வுருவிலானாலும் சரி அது மனித உரிமைகளை அற்றுப்போகச் செய்து விடும் என்பது உறுதி; ஒருவரை, மனத்திலோ உடலிலோ சித்திரவதைக்கு உள்ளாக்குவதும், மனிதத் தன்மையற்ற வகையிலோ இழிவான வகையிலோ நடத்துவதும் மனிதனுக்குரிய மதிப்பையும் கண்யத்தையும் அறவே ஒழித்து, அவனது வாழ்வின் குறிக்கோளையே குலைத்து விடுகிறது.

நவீன காலத்தில் மனித உரிமைகள் சட்டப்படி சட்டங்களின் மூலமாய் பாதுகாக்கப்படுகின்றன; இதைக் கருத்திற் கொண்டு தான் ''சட்டத்தின் முன் எவரும் தம்மை எங்கும் மனிதராக மதிக்கும்படிச் செய்ய உரிமை பெறுவர்'' என்று ஆறுவது ஷரத்தும், ''சட்டத்தின் மூலமான பாதுகாப்பு மக்கள் எல்லாருக்கும் ஏற்றத் தாழ்வின்றி கிடைக்கு'' மென்று ஏழாவது ஷரத்தும், ''அடிப்படை உரிமைகள் மீறப்படுமானல் ஒவ்வொருவரும் செயலான பரிகாரம் தேடிக்கொள்ள உரிமை இருக்கு'' மென்று எட்டாவது ஷரத்தும் விதிக்கின்றன.

மக்கள் உரிமை பற்றிய உலக அறிவிப்பை உலக மக்களின் 'மாக்ன கார்ட்டா' என அழைக்கலாம்; சூரியன் நல்ல பொருள்கள் மீதும் தீயப்

பொருள்கள் மீதும் தன் வெளிச்சத்தைப் பரப்புவது போல, இந்த அறிவிப்பு, குற்றவாளிகளின் உரிமைகளையும் நிரபராதிகளின் உரிமைகளைப் போல நன்கு பாதுகாக்கிறது. "நினைத்தபடி கைது செய்தல், காரணங் காட்டாது சிறையில் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படார்" என்ற ஒன்பதாவது ஷரத்தும், ஒவ்வொருவருக்கும், நேர்மையான பொது மன்ற தீர்ப்பு வேண்ட, சரிநிகர் உரிமையுண்டென பத்தாவதும், "குறிப்பிட்ட குற்றம் மெய்ப்பிக்கப்படும்வரை, குற்றம் சாட்டப்பட்ட, ஒவ்வொருவரும் ஒரு குற்றமும் அற்றவர் என்றே கருதப் படுவர்" என்றும் பதினோராவது ஷரத்தும் விதிக்கின்றன. குற்றவாளி களையும் நிரபராதிகளையும் பாதுகாக்க வகை செய்யும் இவையெல்லாம் கிரிமினல் சட்டம், சட்டத் தொகுப்பு ஆகியவற்றின் அடிப்படைக் கொள் கைகள். குற்றவாளிகளின் உரிமை பாதுகாக்கப்படாவிடில், இறுதியில் நிரபராதிகளின் உரிமைகள் பரிபோய்விடும்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. ஆனால் அவனுக்கென தனி வாழ்க்கை முறை ஒன்றும் உண்டு. வீடு என்பது மனிதனுடைய சொந்த இடம்; அதன் தனித் தன்மையை யாரும் மீறலாகாது; ஒருவர் மற்றொருவருக் குத் தனியாக எழுதும் விஷயம் இரகசியமாக வேண்டும். ஆகவே பன்னி ரெண்டாவது ஷரத்து, மனிதனுடைய வீட்டின் இயல்பையும் அவனது கடிதப் போக்குவரத்தின் ரகசியத் தன்மையையும் மனிதனது பெருமை யும் புகழும் நன்கும் பாதுகாக்கப்படுவதற்கு வகை செய்கிறது.

பதிமூன்றாவது ஷரத்து 'நாட்டு எல்லைக்குள் விரும்பியவாறே எங் கும் போகவோ குடியிருக்கவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு' என்று விதிக்கிறது. அதோடின்றி நடமாட்ட சுதந்திரம் நாட்டின் எல்லைக்கு அப்பாலும் இருக்கும் என்று அது கூறுகிறது; 'ஒவ்வொரு வருக்கும் தன் நாட்டை அல்லது எந் நாட்டையும் விட்டு அகலவோ அவைகளுக்குத் திரும்பவோ உரிமை உண்டு" என்றும் அந்த ஷரத்து கூறுகிறது.

கொடுங்கோலன் அல்லது சர்வாதிகாரியால் துன்புறுத்தப்பட்டு கொடுமைக்குள்ளாகி சொந்த நாட்டிலிருந்து புகலிடம் தேடி ஓடிய ஆண் பெண்களின் கதை, உலக வரலாற்றில் சகஜமாய் விட்டது. ஆகவே தான் "அலைப்புப் பிடியிலிருந்து அகலவும் பிற நாட்டை ஏற்ற புகலிட மாகத் தேடிக் கொள்ளவும் அங்கிருந்து இன்பம் நுகரவும் ஒவ்வொரு வருக்கும் உரிமையுண்டு" என்று பதினான்காவது ஷரத்து விதிக்கிறது. ஆனால் ஒவ்வொருவருக்கும் புகலிடம் அளித்தே ஆகவேண்டும் என்று அந்த ஷரத்து கூறவில்லை; ஏனெனில் புகலிடம் தருவதற்கான பூர்ண உரிமை சம்பந்தப்பட்ட நாட்டினைச் சேர்ந்ததாகும்.

சமீப காலத்தில் ராஜ்யமற்ற மக்களின் பிரச்னை தீவிரமாக வளர்ந்துள்ளது. சர்வதேச சட்ட அமைப்பில் இது விசித்திரமான பிரச்னை. ராஜ்யம் எதிலும் பிரஜாவுரிமை யற்றுள்ள மக்கள், எந்த ராஜ்யத்தின் பாதுகாப்பையும் பெருதவர்கள். அவர்கள் தாம் வசிக்கும் நாடுகளிலும் பல்வேறு உரிமைகளையும் சலுகைகளையும் பெற அருகதையற்றவர்கள். ஆகவேதான் பதினைந்தாவது ஷரத்து ''நாட்டியலில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு'' என்று கூறுகிறது. ஏற்கனவே நாட்டியலில் சேர்ந்துள்ளவர்கள் தான்தோன்றித்தனமாக மறுக்கப்படார்; அன்றியும் அதனை மாற்றிக் கொள்ளவும் தடை செய்யப்படார் என்றும் அந்த ஷரத்து விதிக்கிறது.

''குடும்பம், சமுதாயத்தின் இயல்பாக அமைந்த அடிப்படைக் குழூஉ ஆதலின் அதற்குச் சமுதாயம் அரசு என்ற இவைகளின் பாதுகாப்பைப் பெற முழு உரிமை உண்டு'' என்று பதினருவது ஷரத்து கூறுகிறது. இனம் நாட்டியல் சமயம் என்ற வேற்றுமை எதுவுமின்றி ஆண்களும் பெண்களும் விரும்பியவாறு மணம் புரிந்து இல் வாழ்க்கை நடத்தவும் அது உரிமையளிக்கிறது. அவர்களுக்குத் திருமண விஷயத்திலும் மண வாழ்க்கையின் போதும் மணவிலக்கு விஷயத்திலும் சம உரிமை உண்டு. மணக்க விரும்பும் இரு பாலரது சுதந்திரமான முழு இசைவும் பெற்ற பின்பே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்படும்.

இந்த நவீன சமுதாயத்தில் சொத்து உரிமை என்பது சர்ச்சைக்கிடமான விஷயமாக இருக்கிறது. பதினேழாவது ஷரத்து மிகப் பொதுப்படையாக விருப்பினும் அந்த உரிமையை தெளிவாக ஏற்கிறது. ''ஒவ்வொருவருக்கும் தனியாகவோ, சேர்ந்தோ சொத்துடமை கொள்ள உரிமையுண்டு. யாருடைய பொருளும் தான்தோன்றித்தனமாக கவர்ந்து கொள்ளப் படமாட்டாது'' என்று அது கூறுகிறது.

'ஒவ்வொருவருக்கும் தம் கொள்கையையும் எண்ணத்தையும் சமயத்தையும் பின்பற்ற உரிமையுண்டு' என்று பதினெட்டாவது ஷரத்து கூறுகிறது. இந்த உரிமை இயல்பாக பூர்ணமானது, புனிதமானது, மீற முடியாதது. எந்தக் கொடுங்கோலனும் தனி நபரின் ஆத்மீகத் துறையில் குறுக்கிட முடியாது. ''சமயத்தை மாற்றிக்கொள்ளவும் தனியாகவோ அல்லது கூடியோ சமயக் கோட்பாட்டையோ நம்பிக்கையையோ வெளிப்படுத்துவதற்கும் பின்பற்றுவதற்கும் வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் உரிமை உண்டு'' என்று இந்த ஷரத்து விதிக்கிறது.

பத்தொன்பதாவது ஷரத்து 'ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும் எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு' என்று கூறுகிறது. இந்த உரிமைகளின் பொருளையும் உரிமைகளின் அமல் வரம்பையும் அது குறிப்பிடுகிறது. 'எத்தகைய தடையுமின்றி ஒவ்வொருவரும் தத் தமக்கு வேண்டிய சொத்துக்களையும் கருத்துக்களையும் எந்த நாட்டி லிருந்தும் எந்த முறையாலும் பெற்றுக்கொள்வதற்கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு.' ஐக்கிய நாடுகள் நிலைநாட்டுவதாக உறுதி கொண் டுள்ள சுதந்திரங்களில் எல்லாம் தகவல் அறிவிக்கும் உரிமை 'ஒரு உரைக்கல்' என்று மகாசபை அதன் தீர்மானம் ஒன்றில் கூறியிருப்ப திலிருந்து அதன் முக்யத்வத்தை உணரலாம்.

''ஒவ்வொருவருக்கும் அமைதியான முறையில் கூடுவதற்கும் கழகம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமை உண்டு. ஒவ்வொருவரும் தனித் தனியே வாழவேண்டுமென்று நிர்ப்பந்தம் இருக்குமானால் சிவில் சமூகம் என்பதே சாத்யமில்லாது போய் விடும். ''எந்தக் கழகத்திலும் சேரும் படி எவரையும் கட்டாயப்படுத்த உரிமை கிடையாது'' என்று அது சொல்லுகிறது. இங்கு கழகம் என்பது எந்த சங்கத்தையும் குறிப்பிடும். மதப்பிரிவுக்கானதாகவோ அரசியல் கட்சியானதாகவோ, அல்லது தொழில் ஸ்தாபனமானதாகவோ அது இருக்கலாம்.

'அரசாங்க அதிகாரத்தின் அடிப்படை மக்களின் விருப்பமே ஆகும். ஒவ்வொருவரும் தமது நாட்டின் அரசாங்கத்தைத் தெரிந்தெடுக்க உரிமை கொண்டவர்கள். அப்போதைக்கப்போது சுயேச்சையான ரகசியமுறையில் தேர்தல் நடக்க வேண்டும்; எல்லோருக்கும் சமமான 'வோட்' உரிமையுள்ளதான தேர்தலாக அது இருக்க வேண்டும். 'ஒவ் வொருவரும் அரசியல் அலுவல்களிலே சமமான பங்கு பெற உரிமை யுள்ளவர்கள்' ஒவ்வொருவருக்கும் அரசாங்க உத்தியோகங்களில் சம மான வாய்ப்புக்கள் இருக்கும்' என்று அது கூறுகிறது.

பொருளாதார சமூகக்கலாசார உரிமைகள்:

'சிவில், அரசியல் உரிமைகளை அனுபவிப்பதும் பொருளாதார சமூகக் கலாசார உரிமைகளைப் பெற்றிருப்பதும் ஒன்றோடொன்று சார்புடை யவை; ஒன்றோடொன்று பிணைந்தவை' என்று ஐக்கிய நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளது. மனிதன் பொருளாதார சமூகக் கலாசார உரிமைகள் கொண்டிருக்க வில்லையெனில் அவன் சுதந்திரவாழ்வு வாழ்வதாகக் கொள்ள முடியாது. தீர்மானம் 427 (V). மனிதன் ஓரளவு பொருளா தார சமூகப் பாதுகாப்போ, குறைந்த பட்சக் கல்வியோ, பண்பாடோ இல் லாமல் தனது கண்யத்தையோ சுதந்திரத்தையோ பராமரித்துக்கொள்ள முடியாது. இருபத்திரண்டாவது ஷரத்திலிருந்து இருபத்தியேழாவது

ஷரத்து வரை பொருளாதார சமூகக் கலாசார உரிமைகளில் எல்லோருக்கும் உரிய இன்றியமையாத உரிமைகள் விவரிக்கப்படுகின்றன.

இருபத்தியிரண்டாவது ஷரத்து பொதுப்படையானது. ஒவ்வொருவருக்கும் தகுந்தபடி சமுதாயப் பாதுகாப்பு உறுதி அளிக்கப்படும். 'அதற்கேற்ப ஒருவருடைய வாழ்வும் பண்பும் உயர்வதற்கு வேண்டிய பொருளாதார சமுதாய கலைபண்பு உரிமைகள் காப்பாற்றப்படும்.' இந்த உரிமைகளை "நாட்டியல் முயற்சியினாலும் கூட்டு நாட்டியல் ஒற்றுமையினாலும் அந்தந்த நாட்டின் அமைப்பிற்கும் பொருளாதார நிலைமைக்கும் தகுந்தபடி" பெறலாம்.

இருபத்திமூன்று, இருபத்திநான்கு இருபத்திஐந்து ஆகிய ஷரத்துக்கள் பொருளாதார சமூக உரிமைகள் பற்றியவை; 'ஒவ்வொருவருக்கும் தமக்கு விருப்பமான வேலையில் அமர்வதற்கு உரிமையுண்டு' என்று இருபத்தி மூன்ருவது ஷரத்து அறிவிக்கிறது; நவீன சமூகவியல் சம்பந்தமாக சட்டம் இயற்றும் துறையில், இந்த உரிமையை அங்கீகரிக்கும் இந்த ஷரத்து மிகச் சிறப்பானது. அரசாங்கம் உத்திரவாதம் தர இயலாத போனாலும் வேலை செய்வதற்கான அந்த உரிமையைப் பேணி வளர்த்தாக வேண்டியது அவசியமாகிறது.

வேலை செய்வதற்குரிய உரிமையை அனுபவிப்பதற்கு 'விருப்பமான வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவும்,' நலந்தரும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்ளவும் உரிமை இருப்பது அவசியமாகும். ஆனால் விருப்பத்திற்கு எதிராக வேலை செய்யும்படியோ அடிமையாயிருக்கும்படியோ கட்டாயப்படுத்தப் படுவோர் விஷயத்தில் வேலை செய்வதற்கான உரிமைக்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

வேற்றுமை ஏதுமின்றி அனைவருக்கும் தத்தம் வேலைக் கேற்ப ஊதிய உரிமை உண்டு என்றும் நியாயமான ஊதியம் பெற உரிமை உண்டு என்றும் 23-வது ஷரத்து கூறுகிறது. ஆண்களுக்கும் பெண்களுக்கும், வெவ்வேறு மதத்தினருக்கும் இனத்தவர்க்கும் இடையே சம்பள விஷயத்தில் வேற்றுமை ஏதும் இருக்கலாகாது என்றும் மனித கண்யத்தைக் காத்துக் கொள்ளக் கூடியதாய் சம்பளம் இருக்க வேண்டும் என்றும் அது விதிக்கிறது.

இறுதியில் ஒவ்வொருவருக்கும் தத்தம் நலனைக் காப்பாற்றிக்கொள்ள வணிகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்கும் அவற்றை அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு என்று அந்த ஷரத்து கூறுகிறது. 'ஒவ்வொருவருக்கும் வேலை நேரத்தில் வரையறையும் விடுபாடும் காலத்திற்குக் காலம் ஊதியத்தோடு பெறும் விடுமுறையும் அடைவதற்கு உரிமையுண்டு' என்று இருபத்திநாலாவது ஷரத்து கூறுகிறது.

இருபத்தி ஐந்தாவது ஷரத்து சமூகப் பாதுகாப்புக்கும் சமூக உதவிக்குமான துறை முழுவதையும் பற்றியதாகும். "உணவு, உடை, வீடு, வைத்தியப் பராமரிப்பு என்பவற்றுடன் தேவையான சமுதாய சேவைகளையும் தானும் தன் குடும்பமும் ஆரோக்யமாக நல் வாழ்வு வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கும் வேலையின்மை, சுகவீனம், அங்கக் குறை, கைம்பெண்ணுதல், முதுமை ஆகியவற்ருல் ஊதியமின்மை ஏற்படுகையில் பாதுகாப்புப் பெறுவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு" 'என்று அது கூறுகிறது. தாய்மார்களும் குழந்தைகளும் விசேஷ கவனத்துக் குரியவர்கள்.

கல்வி கலாசார உரிமைகள் இருபத்தியாறு இருபத்தியேழாவது ஷரத்துக்களில் விவரிக்கப்படுகின்றன. 'ஒவ்வொருவருக்கும் படிப்பதற்கு உரிமையுண்டு. இந்த உரிமையை உலகெங்கிலும் இப்போது ஒப்புக் கொண்டுள்ளனர். பிரஜைகள் அனைவருக்கும் கல்வி கற்பிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று இப்போது கருதப்படுகிறது; என்ருலும் பிள்ளைகளின் கல்வியைப்பற்றி முன் கூட்டியே முடிவு செய்ய முழு உரிமை இருக்கும்.

கல்வியின் பல்வேறு வகைகளையும் கட்டங்களையும் இந்த ஷரத்து குறிப்பிடுகிறது; ஆரம்பக் கல்வி என்பது இலவசமானதாகவும் கட்டாயமானதாகவும் இருக்க வேண்டும். பொதுவாக தொழிற் கல்வியிலும் நுட்பக் கல்வியிலும் எல்லோருக்கும் சமமான வாய்ப்பு இருக்கும். உயர்நிலைக் கல்வி, தகுதியின் அடிப்படையிலே வழங்கப்படும். "அடிப்படை உரிமைகளையும் மனிதரது உரிமைகளின் மதிப்பைப் பெருக்கவும், மனிதரது பண்பாட்டை நிறைக்கவும் ஆன முறையில் கல்வியின் போக்கு அமையும். அது ஒற்றுமையையும் நட்பையும் நாடுகளுக்குள்ளும் இனத்திற்குள்ளும் கூட்டத்திற்குள்ளும் வளர்த்து அமைதியை நிலை நாட்டும்; ஐக்கிய நாட்டின் முயற்சியையும் அது ஓங்கச் செய்யும்."

'ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தின் கலை வாழ்விலே கலந்து கொள்வதற்கும் கலையிலே ஈடுபடுவதற்கும் அறிவியல் துறை முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்கும் அதன் பயனைப் பெறுவதற்கும் உரிமையுண்டு' என்று இருபத்தி ஏழாவது ஷரத்து கூறுகிறது. கலைகளும் விஞ்ஞானங்களும் கொண்டதான கலாசாரம் என்பது இனி ஒரு சிலரது உரிமையாக இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் தங்களால் வெளியிடப்பட்ட அரசியல் விஞ்ஞான இலக்கிய உண்மைகளினுல் வரும் பெயரையும் பொருளையும் பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு.

இறுதி ஷரத்துக்கள்

அறிவிப்பில் கண்ட உரிமைகளையும் சுதந்திரங்களையும் பயங்கர ஆட்சியுள்ள நாட்டிலோ அல்லது போர் மூண்டுள்ள உலகிலோ அல்லது கொந்தளிப்பு மிக்க உலகிலோ அனுபவிக்க முடியாது. அத்தகைய நிலைமை இருக்கும் காலத்தில் மனித உரிமைகள் அமல் நிறுத்தி வைக்கப்படுகிறது அல்லது புறக்கணிக்கப்படுகிறது. வாழ்க்கைக்கும் உரிய மதிப்பு தரப்படுவதில்லை. சட்டத்தின் மூலமான ஆட்சிக்கும் பரஸ்பர மதிப்புக் கொள்கைக்கும் இடந்தரும் சமூக ஏற்பாடும் இருந்தால் மட்டுமே மனித உரிமைகள் முற்றிலுமாக அனுசரிக்கப்படும். ஒவ்வொருவருக்கும் அத்தகைய சமூக, சர்வதேச ஏற்பாடு ஒன்றை பெற்றிருக்க உரிமையுண்டு என்று இருபத்தியெட்டாவது ஷரத்து கூறுகிறது.

உரிமை ஒவ்வொன்றுக்கும் கடமைப் பொறுப்பு உண்டு என்பது சொல்லாமலேயே விளங்கும். இந்த அறிவிப்பு, உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரகடனஞ் செய்வதற்கானது. என்றாலும் "ஒவ்வொருவருடைய சுபாவம் கட்டுப்பாடின்றி பரிபூர்ணமாக அபிவிருத்தியடைவதற்குரிய ஒரே சாதனம் அவரவரது சமூகமே ஆதலின் அந்த சமூகத்துக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு. ஒவ்வொருவரும் தன் தன் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்குங்கால், அவர்களது கருமங்களைக் கட்டுப்படுத்துவனவாய் செயல்கள், மற்றவர்களது உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அளிக்க வேண்டிய மதிப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் மாத்திரம் சட்டப்பூர்வமாக நிருணயிக்கப் பட்டனவாயும், ஓர் ஜனநாயக சமூகத்தின் ஒழுக்கம், பொது அமைதி, பொது சேமாபிவிருத்தி என்பனவற்றுக்கு நீதி நியாயப்படி வேண்டிய அளவினவாயும் இருக்கும்." ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்து நோக்கங்கள் கொள்கைகளுக்கு முரணாக இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் எவ்விடத்திலும் பிரயோகிக்க முடியாது.

'இந்த அறிக்கையில் கண்ட உரிமைகளையோ, விடுதலைப் பேறுகளையோ அழிக்க வேண்டி எதனையேனும் செய்யவோ அத்தகைய இயக்கத்தில் ஈடுபடவோ எந்த நாட்டிற்கும் எந்தக் குழுவினுக்கும் எந்த மனிதனுக்கும் உரிமையளிக்கும் குறிப்புடையதாக இந்த அறிக்கையில் உள்ள எதற்கும் பொருள் கொள்ளலாகாது' என்று முப்பதாவது ஷரத்து கூறுகிறது.

தார்மீகம் அல்லது சட்டபூர்வமான மதிப்பு:

இந்த அறிவிப்பை சர்வ தேச 'மாக்ன கார்ட்டா' அல்லது சர்வதேச உரிமை சாஸனம் என்று அழைக்கப்படுகிறது. மனிதன் காட்டுமிராண்டி

யாக இருந்த காலத்திலிருந்து சுதந்திர ஆட்சிக்கு முன்னேறிய கடும் பாதையில் இது முக்யமான ஒரு கட்டத்தைக் குறிப்பதாகச் சொல்லலாம்.

மனிதனின் உரிமைகள் பற்றி வெவ்வேறு அறிவிப்புகள் பல உள்ளன; அவற்றில் எல்லாம் இந்த உலக அறிவிப்பு தான் மிக விரிவானது; உலகம் முழுவதிலும் பரவிக் கிடக்கும் ஆண்கள், பெண்கள் எல்லோருக்கும் பொருந்துவதாக சரித்திரம் கண்டுள்ள முதலாவது அறிவிப்பு இது தான். இதை பாரீஸ் நகரில் ஐக்கிய நாடுகள் மகா சபை ஏற்றுக்கொண்ட போது மகா சபை அக்ராசனர் ஹெர்பர்ட் வீரி எவாட் என்ற ஆஸ்டிரேலியர் சொன்னது நினைவிற்கு வருகிறது; அவர் சொன்னர்:

''உலக நாடுகளின் ஸ்தாபனம் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் கொண்டதாக அறிவிப்பு ஒன்றை முதல் தடவையாக வெளியிட்டுள்ளது. அந்த அறிவிப்பு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முழு அதிகாரத்தின் வலுவும் கொண்டுள்ளது. பாரிஸிலிருந்தும் நியூயார்க்கிலிருந்தும் வெகு தொலைவில் பரவிக் கிடக்கும் கோடிக் கணக்கான ஆண்களும் பெண்களும் பாலர்களும் உதவியும் உற்சாகமும் பெறுவதற்காக இந்த அறிவிப்பை தமக்குற்ற வழிகாட்டியாக மதித்து வரவேற்பார்கள்'' என்ருர் அவர்.

இந்த உலக அறிவிப்பு அற நெறி தரங்களின் பிரகடனமா அல்லது சட்டம் அடங்கிய அறிக்கையா என்று அடிக்கடி கேட்கப்படுகிறது. இந்த கேள்விக்குத் தெளிவாக பதில் அளிப்பதற்கில்லை.

இந்த அறிவிப்பு பொதுக் கொள்கைகளின் தொகுப்பு என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதற்கு தார்மீக வலுவுண்டு. இதை மகாசபை ஒரு எதிர்ப்பு 'வோட்டு' கூட இல்லாமல் ஏற்றுக் கொண்டது. ஆனல் அது ஒப்பந்த வடிவில் வரையப்பட்டதல்ல. ஆகவே அதற்கு எந்த ராஜ்யமும் ஒப்பமிடுவதோ ஊர்ஜிதம் செய்வதோ அவசியமில்லை. ஆகவே இந்த அறிவிப்பு சர்வதேச சட்டம் அல்லது முனிசிபல் சட்டத்தின் பகுதியல்ல. இது சட்டபூர்வமான கருவியாகும் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். என்ருலும் உலக நாடுகளின் தலைசிறந்த ஸ்தாபனத்தினுல் ஏற்கப்பட்டிருப்பதனுல் அந்த அறிவிப்பிற்குத் தனியான தார்மீக சக்தி இருக்கவே செய்கிறது என்பதைப் புறக்கணிப்பதற்கில்லை. ஒவ்வொரு உரிமை விஷயமாகவும் சுதந்திரம் விஷயமாகவும் இந்த அறிவிப்பில் காணும் விவரங்களை, உலக நாடுகளின் மக்களும் அரசாங்கமும் தரமானவை என்பதாகக் கொள்ளுமேயானல், இந்த அறிவிப்பு எந்த தனிச் சட்டம் அல்லது ஒப்பந்தத்தைவிட வன்மை மிக்கதென்பதாகக் கொள்ளலாம்.

சில சட்ட நிபுணர்களும் அரசியல்வாதிகளும் இந்த உலகப் பிரகடனத்திற்கு சட்ட ரீதியான மதிப்புண்டு அல்லது அதற்கு சட்டத்தின் மூலமான வலு அறவே இல்லாமல் போகவில்லை என்று கருதுகிறார்கள். அவர்கள் சொல்லும் வாதம் இதுதான்:— "ஐக்கிய நாடுகள் சாஸனம் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்துவதான தொரு ஒப்பந்தம்". "இனம், மதம், பால், மொழி ஆகிய வேறுபாடின்றி மக்கள் அனைவருக்கும் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் கிட்டும்படிச் செய்து அவற்றை எல்லோரும் மதித்து நடக்கும்படிச் செய்ய ஊக்கமளிப்பதற்கு" "உலக நாடுகள் தனியாகவும் கூட்டாகவும் நடவடிக்கை மேற்கொள்ள உறுதி கொள்வதாக" சாஸனத்தின் ஐம்பத்தி ஐந்து, ஐம்பத்தி ஆறுவது ஷரத்துக்கள் கூறுகின்றன. என்றாலும் மனித உரிமைகள் என்ன என்பதை அந்த சாஸனம் விவரிக்கவில்லை; ஆனால் உலகப் பிரகடனம் மனித உரிமையை அதிகார பூர்வமாக இன்னதென விவரணஞ் செய்கிறது; சாஸனத்தில் காணும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவரை அந்த நாடுகள் கட்டுப்பட்டுள்ளன; இதே மாதிரி அவை உலகப் பிரகடனத்தை மதிக்கவும் கட்டுப்பட்டிருக்கின்றன.

உலகப் பிரகடனத்தின் ஷரத்துக்கள் பல, தேசிய அரசியல் சட்டங்களையும் உரிமை பட்டயத்தையும் ஆதாரமாகக் கொண்டனவயே என்றும் வாதிக்கிறார்கள். ஆகவே 'நாகரிகமுதிர்ந்த நாடுகள் ஏற்றுள்ள பொதுவான சட்டக்கொள்கைகள் பலவற்றை' பிரகடனம் கொண்டிருக்கிறது என்று சர்வதேச நீதிமன்றத்துக் கூட்டம் கூறுகிறது.

உலகப்பிரகடனமும் மனிதஉரிமைத் திட்டமும்.

இதுவரை ஐக்கிய நாடுகளில் உருவாகிவந்துள்ளதும் வருவதுமான மனித உரிமைத்திட்டம் பெருமளவு, உலகப் பிரகடனத்தின் கட்டமைப்பிற்குட்பட்டது. (3) இத்திட்டத்தின் நோக்கம் அறிவிப்பில் காணும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மேன்மேலும் அமல் செய்வதற்கு ஊக்கமளிப்பது தான் என்று கூறலாம்;

உதாரணமாக மனித உரிமைகள் பற்றிய ஒப்பந்த வாசகங்களுக்கு ஊக்கமும் ஆக்கமுமளிப்பது உலகப் பிரகடனம்; சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்துக்கான பூர்வ பீடிகையில் காணுவதாவது:—

> "சிவில் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதுடன் பயத்தினின்றும் வறுமையினின்றும் விடுதலை பெற்றிருக்கும் மனிதர்

3. இந்தத் திட்டம் பற்றிய பூராவிவரங்களைத் தெரிந்துகொள்ள "மனித உரிமைகளை நிலை நாட்டுவதில் ஐக்கிய நாடுகள் பணி" என்ற பிரசுரத்தைப் பார்க்கலாம்.

களின் சுயேச்சை என்பது தான் லக்ஷியமென்று மனித உரிமைகளின் உலக அறிவிப்பு கூறுவதை இந்த ஒப்பந்தம் ஏற்கிறது. இந்தக் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானல், ஒவ்வொருவரும் தமது சிவில் அரசியல் உரிமைகள் மட்டுமின்றி பொருளாதார சமூகக்கலாசார உரிமைகளையும் அனுபவிக்கும்படியானதொரு நிலைமையைத் தோற்றுவிக்க வேண்டியது இன்றியமையாதது.''

பொருளாதார சமூகக்கலாசார உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்துக்கான பூர்வ பீடிகையில் காணுவதாவது.

''பயத்தினின்றும் வறுமையினின்றும் விடுதலை பெற்றிருக்கும் மனிதர்களின் சுயேச்சைஎன்பது குறிக்கோள் என்று மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பு கூறுகிறது. இதை இந்த ஒப்பந்தம் ஏற்கிறது; இந்தக் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானல் ஒவ்வொருவரும் தமது பொருளாதார சமூக கலாசார உரிமைகளை மட்டுமின்றி சிவில் அரசியல் உரிமைகளையும் அனுபவிக்கும்படியான தொரு நிலைமையைத் தோற்றுவிக்க வேண்டியது அவசியம்.''

உலக அறிவிப்பின் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகளின் பொதுவான தரங்களை அமல் செய்வதிலும் குறிப்பான சில உரிமைகள் அல்லது உரிமைகளின் வகைகள் சம்பந்தமான சட்டங்கள் அல்லது பழக்கவழக்கங்கள் குறித்து விசாரிப்பதிலும் ஐக்கிய நாடுகள் அதிக கவனம் செலுத்தி வருகிறது. மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் உலக நாடுகள் தமக்கிடையே அனுபவங்களை சுயேச்சையாகப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கான சாதனம் ஒன்றை உருவாக்குவதிலும் அது கவனஞ் செலுத்திவருகிறது.

மனித உரிமைகள் சம்பந்தமாக அப்போதைக்கப்போது அங்க நாடுகள் அறிக்கை கொடுத்து வரவேண்டுமென்ற ஏற்பாட்டைப் பொருளாதார சமூக நல சபை 1956-ம் ஆண்டில் அமலுக்குக் கொண்டு வந்தது. மனித உரிமைகள் சம்பந்தமாகவும் மனித சுயேச்சையை காப்பது சம்பந்தமாகவும் அங்க நாடுகளிலும் அதன் பிராந்தியங்களிலும் டிரஸ்டி பகுதிகளிலும் முந்திய மூன்று ஆண்டுகளில் நடந்துள்ள சம்பவங்களையும் அபிவிருத்தியையும் பற்றி அங்கநாடு ஒவ்வொன்றும் அறிக்கை ஒன்றில் விவரித்து அதை தாக்கல் செய்ய வேண்டும். 'மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பில் கூறப்படும் உரிமைகளையும் மக்களது சுய நிர்ணய உரிமையையும் அந்த அறிக்கை' விவரிப்பதாயிருக்கும். அந்த அறிக்கைகளை மனித உரிமைக் கமிஷன் ஆராய்கிறது; பொதுவான வகையில் உருவான சிபார்சுகளையும் முடிவுகளையும் கருத்துக்களையும் அது தெரிவிக்கிறது.

அதே வருஷம் பொருளாதார சமூகநலசபை சில குறிப்பான உரிமைகள் அல்லது வெவ்வேறு வகை உரிமைகள் பற்றி ஆராய்ச்சிகள் பலவற்றை மேற்கொள்ளுமாறு கமிஷனைப் பணித்தது. ''நினைத்தபடி கைது செய்தல், காரணங் காட்டாது சிறையில் அல்லது நாடுகடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படார்'' என்ற அறிவிப்பின் ஒன்பதாவது ஷரத்து சம்பந்தமாக முதலில் ஆராயவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது; இதற்கு முன்னர் அதாவது 1953, 1954–ம் ஆண்டுகளில் பல ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு சபை அங்கீகாரம் அளித்தது; கல்வித்துறை, வேலை வாய்ப்பு, தொழில், மத உரிமைகள், பழக்கங்கள், அரசியல் உரிமைகள் ஆகியவற்றில் வேற்றுமை காட்டுவது சம்பந்தமானவை அந்த ஆராய்ச்சிகள்.

''சாஸனத்திலும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிலும் விவரிக்கப்பட்டுள்ள மனித உரிமைக் குறிக்கோள்களை பேணி வளர்ப்பதற்கென 1955-ம் ஆண்டில் மகாசபை, மனித உரிமைகள் துறையில் ஆலோசனை கூறி உதவுவதற்கான பணியை ஆரம்பித்தது. இந்த திட்டப்படி மனித உரிமைகள் சம்பந்தமான மகாநாடுகள் நடத்தப்படுகின்றன. 'பிரஜைகளின் கடமை பொறுப்புகள் மாதர் பொது வாழ்வில் அதிக அளவில் கலந்து கொள்வது' என்ற தலைப்பில் ஒரு பிராந்திய மகாநாடு ஒன்றும் 'கிரிமினல் சட்டத்திலும் நடைமுறையிலும் சம்பந்தப்பட்ட மனித உரிமைப் பிரச்னைகள்' என்பது சம்பந்தமாக இரண்டு பிராந்திய மகாநாடும் இதுவரை நடந்திருக்கின்றன.

உலக அறிவிப்பும் விசேஷ ஸ்தாபனங்களும்:

மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவரை விசேஷ ஸ்தாபனங்களின் திட்டங்களை முழுவதுமாக போதிய அளவில் இச்சிறு நூலில் விவரிப்பது சாத்தியமில்லை. உலகப் பிரகடனத்தில் அக்கறையுள்ள விசேஷ ஸ்தாபனங்களை சுருக்கமாக குறிப்பிடுவது தான் இந்தப் பகுதியின் நோக்கம்.

உதாரணமாக சர்வ தேசத் தொழிலாளர் ஸ்தாபனம் அடிப்படைச் சுதந்திரங்களில் அக்கறை கொண்டிருக்கிறது; அதன் தலைமை ஸ்தாபனத்தின் குறிக்கோளை வெகு அழகாகக் கூறியுள்ளார். ''வேலை செய்து வாழ்வது, நியாயமானதும் சாதகமானதுமான வேலையைச் செய்வது, சமூகப் பாதுகாப்பிற்குள்ள உரிமையும், போதிய வாழ்க்கைத்தரம் பெற்

4. கல்வித்துறையில் வேற்றுமை பாராட்டுவது சம்பந்தமாக, பாரபட்சத்தைத் தடுப்பதற்கும் சிறுபான்மைப் போர் நலன்களை காப்பதற்குமான துணைக் கமிஷன் ஆராய்ந்தது. வேலையிலும் தொழிலிலும் பாரபட்சம் காட்டுவது சம்பந்தமாக சர்வ தேச தொழிலாளர் நலஸ்தாபனம் ஆராய்ந்துள்ளது; மற்ற இரண்டு ஆராய்ச்சிகளை இப்போது துணைக்கமிஷன் நடத்தி வருகிறது.

திருப்பது, தாயையும் சேயையும் சிறப்புறக் காப்பாற்றி இளம் வயதின ருக்கும் பாதுகாப்பு அளிப்பது, தொழிலாளர் யூனியன்களை அமைப்பது ஆகிய உரிமைகளை வாங்கித் தருவது இந்த ஸ்தாபனத்தின் நோக்கம்'' என்று கூறியிருக்கிறார். பல்வேறு சாஸனங்களின் மூலமாகவும் சிபார்சு கள் மூலமாகவும் சர்வ தேச தொழிலாளர் நல ஸ்தாபனம், மனித உரிமை களில் சில உலக முழுவதிலும் அனுபவிக்கப்படுகிறது என்று உத்தர வாதம் செய்வதற்கான ஸ்தாபன முறை ஒன்றை உருவாக்கிக் கொண் டுள்ளது.

உலக அறிவிப்பின் 26-வது ஷரத்திலும் 27-வது ஷரத்திலும் விவ ரிக்கப்படும் கல்வி கலாசார உரிமைகள், ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தின் திட்டங்களின் முக்கிய நோக்கம். அறிவிப்பின் 2-வது ஷரத்து கூறுவதுபோல பாரபட்சத்தை எதிர்த்துப் போராடுவதும் அறிவிப்பில் காணும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மக்களுக்குப் போதித்து அவற்றை வளர்ப்பதும் அதன் நோக்கமாகும்.

''உணவு, உடை, வீடு, வைத்திய பராமரிப்பு என்பவற்றுடன் தேவை யான சமுதாய சேவைகளையும் தானும் தன் குடும்பமும் ஆரோக்கியமாக வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத்தரத்தைப் பெறுதற்கும் ஒவ்வொரு வருக்கும் உரிமை உண்டு'' என்று அறிவிப்பின் 25-வது ஷரத்து கூறுகிறது; உலக சுகாதார ஸ்தாபனமும் உணவு விவசாய ஸ்தாபனமும் இந்த ஷரத்தில் அக்கறைக் கொண்டுள்ளன. 'மிக அதிகபட்சமான சுகா தார நிலையைப் பெற்றிருப்பதற்கான உரிமையை வளர்ப்பதும் சுகாதார ஸ்தாபனம் ஆகும். மக்களுடைய சத்துணவு அளவை அதிகரிப்பதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி பொது நல் வாழ்வை நாடுவதும்' உணவு விவசாய ஸ்தாபனத்தின் நோக்கமாகும்.

ஒருவனது கடித போக்குவரத்தில் பிறர் நினைத்தபடி தலையிடுவதை கண்டிப்பது 12-வது ஷரத்தை உருவாக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். உலகத் தபால் யூனியனும் சர்வதேச தொலைதூர தகவல் போக்குவரத்து யூனியனும் இந்த கொள்கையை ஈடேற்றுவதில் முனைந்திருக்கின்றன. நாடுகளுக்கிடையே தபால் போக்குவரத்தை நடத்த சுதந்திரம் உண்டு என்று உலகத் தபால் யூனியன் அறிவித்திருக்கிறது; உலக நாடுகளுக் கிடையே கடிதப்போக்குவரத்தின் ரகசியத்தன்மையை உறுதிப்படுத்து வது தொலைதூரப் போக்குவரத்து யூனியனின் நோக்கமாகும்.

மனித உரிமைகள் தினம்:

உலக அறிவிப்பு பிரகடனமானதும், ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தின் தலைமை டைரக்டர் டிசம்பர் பத்தாம் நாளை

உலகப் பிரகடனமாக அறிவித்தார். 1949 பிப்ரவரி நாலாம் தேதியன்று அவர் அந்த நாடுகளுக்கு அனுப்பிவைத்த ஒரு நிருபத்தில், 'திட்டத்தின் ஒரு பகுதியாக, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அந்த நாளன்று மனித உரிமைகளுக்கும் மனித கண்யத்துக்கும் அஞ்சலி செலுத்த வேண்டும்' என்று யோசனை கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மகா சபை 1948 டிசம்பர் பத்தாந்தேதி யன்று மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தை ஒப்புக் கொண்டது. அந்த நாளை ஆண்டுதோறும் டிசம்பர் பத்தாந் தேதியன்று மனித உரிமைகள் தினமாகக் கொண்டாட வேண்டுமென்றும் மனித முன்னேற்றத்திற்கு மேன் மேலும் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்றும் எல்லா நாடுகளையும் அக்கறையுள்ள ஸ்தாபனங்களையும் மகாசபை 1950 டிசம்பர் 4ந் தேதியன்று இயற்றிய 423 (V) தீர்மானம் கோருகிறது. அதற்குப் பின், டிசம்பர் 10 உலகின் பல்வேறு பாகங்களிலும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

II

அறிவிப்பின் மதிப்பு

இந்தப் பிரகடனத்தை ஏற்றுப் பத்தாண்டு காலமாகிறது; உலக முழுவதிலும் ஆண்கள், பெண்கள் மனத்திலும் அரசாங்க செயல்களிலும் சர்வதேச ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளிலும் பிரகடனத்தின் செல்வாக்கின் சாயைப் படர்ந்திருக்கக் காணலாம். இந்த செல்வாக்கின் மதிப்பை இன்னதென குறிப்பாகச் சொல்வது கடினம்.

ஐக்கிய நாடுகளின் சில அதிகார பூர்வமான நடிவடிக்கைகளிலும் தனி அரசாங்கங்களின் செயல்களிலும் உலக அறிவிப்பு ஊக்கந் தந்து உறுதுணையாக நிற்பதை எடுத்துக் காட்டுவதே இந்தப் பகுதியின் நோக்கம். தனி மனிதர்களுடைய மனத்தில் அறிவிப்பின் செல்வாக்கை மதிப்பிட முடியாது; அதே போல அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்களின் நடவடிக்கை, எந்த அளவிற்கு அறிவிப்பினுல் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் சொல்வதற்கில்லை.

ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களும் சிபார்சுகளும்:

ஐக்கிய நாடுகள் தீர்மானத்திலும் சிபார்சுகளிலும் உலக அறிவிப்போ அல்லது அதன் தனி ஷரத்துக்களோ அடிக்கடி நடவடிக்கையின் அடிப்படையாகவோ, ஒரு சாதனைத் தரமாகவோ குறிப்பிடப்படுகிறது; இங்கு சில உதாரணங்கள் தரப்படுகின்றன.

சர்வதேச சமாதானம்

''மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இயல்பாக அமைந்துள்ள பெருமையும் மாற்றவே முடியாத சரி நிகர் சம உரிமைகளும் இவையெனத் தெளிதலே உலக விடுதலைக்கும் நேர்மைக்கும் அமைதிக்கும் அடிப்படையாகும்'' என்று உலக அறிவிப்பின் தோற்றுவாய் பிரகடனம் செய்கிறது. இதற்கிணங்கவே தான் மகா சபை 1949ல் 'சமாதானத்தின் இன்றியமையா அம்சங்கள்' என்ற தலைப்பில் தீர்மானம் ஒன்றை இயற்றியது. ''மனிதனின் கண்ணியத்தையும் மதிப்பையும் பேணிக் காக்க வேண்டியதின் பெரும் முக்கியத்வத்தை உணர்ந்து அரசியல் எதிர்ப்பை சமாதான முறையில் தெரிவிப்பதற்கு முழு சுயேச்சை அளிக்க வேண்டும் என்றும், மத சுதந்திரத்தைப் பிரயோகிக்க முழு வாய்ப்பு தர வேண்டும் என்றும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பில் கண்டுள்ள அடிப்படை உரிமைகளை முழுதுமாக மதித்து நடக்க

வேண்டும்'' என்றும் அந்தத் தீர்மானம் ஒவ்வொரு நாட்டையும் கோரு கிறது; மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் உலக முழுவதிலும் மதித்தாலன்றி சமாதானம் நிலைத்திருக்க முடியாது என்பது உணரப்படுகிறது.

சுயாட்சியற்ற பகுதிகளும் டிரஸ்ட் பிராந்தியங்களும்.

உலக அறிவிப்பு சுயாட்சி தேசங்களுக்கும் சுயாட்சியற்ற நாடுகளுக் கும் அல்லது 'டிரஸ்ட்' பிராந்தியங்களுக்குமிடையே வேற்றுமை எதுவும் பாராட்டுவதில்லை. எல்லா நாடுகளிலும் உள்ள எல்லா மக்களுக்கும் அது பொருந்தும்; அந்த அறிவிப்பு 1948-ல் பிரகடனமானதிலிருந்து சுயாட்சி யற்ற பகுதிகளில்—டிரஸ்ட் பிராந்தியங்களின் நிர்வாகத்தின் சாதனைக் குரிய தரமாக அது கருதப்பட்டிருக்கிறது.

சுயாட்சியற்ற பகுதிகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பு ஏற்கும் அரசுகள், தத்தம் பகுதிகளில் காணும் பொருளாதார சமூக கல்வித் துறை நிலைமை குறித்து தலைமைக் காரியதரிசிக்கு நுட்ப ரீதியில் தகவல் தருவதற்கு ஒப்புக்கொள்வதாக சாஸனத்தின் 73-வது ஷரத்து 'ஈ' பிரிவு கூறுகிறது. அங்க நாடுகள் தம் வசமுள்ள சுயாட்சி பெற்றிராத பகுதி களில் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் எந்த அளவிற்கு அமல் செய்யப்படுகிறது என்பது குறித்து தகவல் அனுப்பும்படி 1950-ல் மகாசபை கோரிற்று. (தீர்மானம் 446 (V) உலக அறிவிப்பில் கண்டுள்ள கொள்கைகளுக் கிணங்க மனித உரிமைகள் சட்டபூர்வமாக எவ்வகையில் பாதுகாக்கப்படுகிறது என்று தெரிவிக்கும்படி அடுத்த ஆண்டு, மகாசபை அந்நாடுகளைக் கோரியது. அதுவும் குறிப்பாக (1) சட்டக் கொள்கைகள் நடைமுறைகள் (2) அடிப்படைச் சட்டமியற்றுவது—அதனை உபயோ கிப்பது (3) பாரபட்சத்துக்கு எதிராகவுள்ள சட்டங்கள் ஆகிய இவை பற்றிய தகவல்களை தருமாறு அந்தத் தீர்மானம் கோரிற்று. (தீர்மானம் 551 (V)

சாஸனத்தின் 88-வது ஷரத்துப்படி ஒவ்வொரு டிரஸ்ட் பகுதியின் நிர்வாக அரசும், ஆண்டுதோறும் அறிக்கை ஒன்றைத் தர வேண்டும் என்றும் அந்த அறிக்கை ஒரு வினாத்தாள் உருவில் இருக்கும் என்றும் தெரிவிக்கிறது; 1952ல் டிரஸ்ட் சபை ஒரு வினாத்தாளை ஒப்புக்கொண்டது; மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பில் காணுவது போன்ற மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியவற்றில் எவை எவை அந்த பிராந்தியங்களில் உண்டு? மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் முழு அளவில் பிரயோகிப்பதற்குத் தடையாயிருக்க கூடிய சமூக கலாசார இடையூறுகள் உண்டா? பிரஸ்தாப ஆண்டில் அந்

தப் பிராந்தியத்தில் மனித உரிமைகள் சம்பந்தமாக நியாயத்தீர்ப்போ நிர்வாகத்தீர்ப்போ ஏதேனும் உண்டா என்றும் அந்த வினுத்தாள் விவரம் கோரியிருக்கிறது.

1950-ல் மகாசபை சோமாலிலந்துப் பிராந்தியத்திற்கென டிரஸ்டி ஒப்பந்தம் ஒன்றை அங்கீகரித்தது. அதில் நிர்வாக அரசான இடாலி 1948-ம் வருஷம் டிசம்பர் 10-ந் தேதியன்று மகாசபை ஏற்றுக்கொண்ட மனித உரிமைப்பற்றிய உலக அறிவிப்பை சாதனைக்குரிய தரமாக ஒப்புக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறது. (தீர்மானம் 422 (V)

இனவேற்றுமை.

'மனித குலத்தின் உயர் நலனை முன்னிட்டு, மதத்தின் பெயராலும் இனத்தின் பெயராலும் கொடுமை இழைப்பதையும், வேற்றுமை பாராட்டு வதையும் ஒழித்தாக வேண்டும்' என்று மகா சபை உலக அறிவிப்பை ஏற்குமுன் தீர்மானித்திருந்தது. (தீர்மானம் 103 (1). உலக அறி விப்பின் இரண்டாவது ஷரத்தில் வேற்றுமைகளை அகற்ற வேண்டு மென்ற குறிக்கோளைக் காணலாம்.

மகாசபை, உலக அறிவிப்பைக் குறிப்பிட்டு, நிர்வாக அரசுகள் சுயாட்சி பெற்றிராத பகுதிகளில் பாரபட்சமான சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் அகற்றுமாறு கோரி பல தீர்மானங்களை இயற்றியுள்ளது. (தீர்மானம் 644 (VII). டிரஸ்ட் பகுதிகளில் கல்வித்துறையில் காணக் கூடிய வேற்றுமைகளை அகற்றுமாறும் மகாசபை கோரிற்று. (தீர்மானம் 324 (IV). இனவாரிப் பிராந்திய சட்ட அமலை நிறுத்தி வைத்துவிட்டு தென் ஆப்ரிக்க அரசாங்கம், அதன் இன ஒதுக்கல் கொள்கைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மகாசபை தீர்மானம் ஒன்றை இயற்றியது.

திருமணமும் குடும்பமும்.

'குடும்பம், சமுதாயத்தின் இயல்பாக அமைந்த அடிப்படைக் குழூஉ ஆதலின் அதற்குச் சமுதாயம், அரசு என்ற இவைகளின் பாதுகாப்பைப் பெற முழு உரிமையுண்டு' என்ற உலக அறிவிப்பின் பதினுலாவது ஷரத்து விதிக்கிறது. ஆண் பெண்களுக்கு 'திருமண விடயத்திலும் மண வாழ்க்கையின் போதும் மணவிலக்கு (மண முறிவு) விடயத்திலும் சம உரிமையுண்டு' என்றும் அது கூறுகிறது.

பொருளாதார சமூக நல சபை, தனியார் சட்டத்தில் மாதருக்குள்ள அந்தஸ்து சம்பந்தமாக பல தீர்மானங்களை இயற்றியுள்ளது. அவற்றில்

உலக அறிவிப்பின் 16-வது ஷரத்து குறிப்பிடப்படுகிறது. கணவருக்கும் மனைவிக்கும் திருமண வாழ்க்கைப் போன்ற குடும்ப விவகாரங்களில் சமமான உரிமை இருக்கும்படி பார்த்துக்கொள்ளுமாறு அந்த சபை அந்த நாடுகளைக் கோருகிறது; மணமான பெண்டிர் வேலை செய்வதற்கும் பெற்றோர்களுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் அனுபவிப்பதற்கும் அங்க நாடுகள் வகை செய்யுமாறு கோரப்பட்டுள்ளன.

சர்வதேச ஒப்பந்தங்கள்.

உலக அறிவிப்பு சட்ட பூர்வமான சர்வ தேச ஒப்பந்தம் ஆகா தென்ருலும் ஐக்கிய நாடுகளின் ஆதரவிலும் சர்வதேசத் தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் ஆதரவிலும் உருவான சர்வதேச ஒப்பந்தங்களில் அது பிரஸ்தாபிக்கப்படுகிறது; அத்தகைய ஒப்பந்தங்களை, அங்கீகரிக்கவோ ஏற்கவோ செய்யும் நாடுகளை சட்டப்படி கட்டுப்படுத்தவல்லவை.

அகதிகள், ராஜ்ய உரிமையற்ற மக்களின் அந்தஸ்து.

இது சம்பந்தமாக உயர் அதிகாரம் கொண்ட ராஜீயப் பிரதிநிதிகள் மகா நாடு இரண்டு, அதாவது ஒன்று 1951-ம் ஆண்டிலும் மற்ருென்று 1954-ம் ஆண்டிலும் நடந்தன; முதலாவது மகாநாடு, மகாசபையினுல், அகதிகள் பிரச்னையை ஆராய்வதற்காக கூட்டப்பட்டது. (தீர்மானம் 429 (V). இரண்டாவது மகாநாடு ராஜ்ய உரிமையற்ற மக்களின் அந்தஸ்து சம்பந்தமாக ஆலோசனை நடத்துவதற்காகப் பொருளாதார சமூக நல சபையினுல் நடத்தப்பட்டது. (தீர்மானம் 524 (A) (X V III). ஜீனீவாவில் 1951-ம் ஆண்டில் நடந்த மகாநாடு, அகதிகள் அந்தஸ்து சம்பந்தமாக சாஸனம் ஒன்றை ஏற்றுக்கொண்டது. அகதிகள் சட்டப் பூர்வமான அந்தஸ்தை அது விவரணஞ் செய்கிறது. அகதிகளுக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் அது விவரிக்கிறது. ஐக்கிய நாடுகள் தலைமை ஸ்தலத்தில் 1954-ல் கூடிய மகா நாடு ராஜ்ய உரிமையற்ற மக்களின் அந்தஸ்தை விவரிக்கும் சாஸனம் ஒன்றுக்கு அங்கீகாரம் தந்தது. இது அகதிகளின் சாஸனத்தைப் போன்ற மாதிரியிலானது. ராஜ்ய உரிமையற்ற மக்கள் விஷயத்தில் உரிமைகளையும் சலுகைகளையும் அது விவரிக்கிறது. இந்த இரண்டு சாஸனங்களிலும் பூர்வ பீடிகையில்

''மனிதர்கள் அனைவரும் பாரபட்சம் ஏதுமின்றி ஆதார உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற்று அனுபவிப்பார்கள் என்ற கொள்கையை ஐக்கிய நாடுகளின் சாஸனமும், 1948 டிசம்பர் பத்தாந்தேதியன்று அங்கீகாரமான மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பும் பிரகடனம் செய்திருப்பதை முன்னிட்டு'' என்று முதலாவது ஷரத்து கூறுகிறது.

மாதர்களின் அரசியல் உரிமைகள்.

மாதரின் அரசியல் உரிமைகள் சம்பந்தமாக 1952-ம் ஆண்டில் மகா சபை சாஸனம் ஒன்றை இயற்றியது. பெண்டிர் 'வோட்' செய்யவும் தேர்தலில் கலந்து கொள்ளவும் பொதுப்பதவி வகிக்கவும் "எவ்வித பார பட்சமுமின்றி ஆண்களோடு சமமான அளவில் பொது அலுவல்களை" கவனிக்கவும் உரிமையுண்டு என்று அது பிரகடனம் செய்கிறது. இந்த சாசனத்திற்கான பூர்வ பீடிகையின் இரண்டாவது ஷரத்தில் கண்டிருப்ப தாவது:– ஐக்கிய நாடுகள் சாஸனத்தின் ஷரத்திற்கும் மனித உரிமைகள் அறிவிப்பிற்கும் இணக்கமான வகையில், ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் அரசாங்கத்தில் நேரடியாகவோ அல்லது சுயேச்சையான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ கலந்து கொள்ள உரிமையுண்டு; நாட்டின் அரசாங்க உத்தியோகம் பெறுவதில் சமமான வாய்ப்புண்டு; பொது உரிமைகளைப் பெற்று அனுபவிப்பதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள் உண்டு" என்று அந்த பூர்வ பீடிகை கூறுகிறது.

மணமான பெண்டிரின் நாட்டியல்.

மணமான பெண்டிரின் தேசீய இனம் அதாவது நாட்டியல் சம்பந்தமான சாஸனம் ஒன்றை மகாசபை 1957-ம் ஆண்டில் ஏற்றுக்கொண்டது. பெண்டிர் தம் விவாகம் காரணமாகவோ, அதை கலைத்துக் கொண்டதன் விளைவாகவோ அல்லது, திருமண காலத்தின்போது கணவனின் நாட்டியல் மாறியதின் விளைவாகவோ, மாதர் விரும்பினுல், நாட்டியலைப் பெறுவது சம்பந்தமான சட்டங்களில் தகராறுகளை அகற்றுவதற்கானது அந்த சாஸனம். ஒரு ஸ்திரி மறுதேசத்தவரை மணந்துகொள்ளுவதினுலோ வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் தமது திருமணத்தைக் கலைப்பதினுலோ அல்லது திருமணத்தின்போது கணவனின் நாட்டியல் மாறுவதினுலோ, மனைவியின் நாட்டியல் தானுக மாறிவிடாது. பூர்வ பீடிகையின் இரண்டாவது ஷரத்து, மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தின் 15-வது ஷரத்தை குறிப்பிடுகிறது. "நாட்டியலில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு." "எவரும் தம் நாட்டியலில் தான்தோன்றித்தனமாக மறுக்கப்படார்; அன்றியும் அதனை மாற்றிக் கொள்ளவும் தடை செய்யப்பட மாட்டார்."

அடிமை முறையும் ஊழிய முறையும்.

1956-ல் பொருளாதார சமூக நல சபையின் ஆதரவில் நடந்த உயர் அதிகாரம் கொண்ட ராஜ்ய பிரதிநிதிகளின் மகாநாடு, அடிமை முறையை

யும் அடிமை வர்த்தகத்தையும் அதற்கு ஒப்பான இதர பழக்கவழக்கங்களை யும் அகற்றுவதற்கு வகை செய்வதான துணை ஒப்பந்தம் ஒன்றை ஏற்றுக் கொண்டது. அடிமை முறையையும் அடிமை வர்த்தகத்தையும் அறவே அகற்றுவதற்கும், வாங்கிய கடனுக்காக அடிமைப்படுவது முதலான வற்றை அகற்றுவதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. இந்த ஒப்பந்தத்தின் பூர்வ பீடிகை, உலக அறிவிப்பின் நாலாவது ஷரத்தைக் குறிப்பிடுகிறது. "எவரும் அடிமைத்தனத்திலேயோ அல்லது ஆட்பணி யிலேயோ ஆழ்த்தப்படார்; அடிமை முறையும் அடிமை வர்த்தகமும் எவ் வடிவில் தோன்றினும் அது தொடர்ந்து துடைக்கப்படும்' என்று அந்த நாலாவது ஷரத்து கூறுகிறது.

கட்டாய வேலை:

1951-ம் ஆண்டில் பொருளாதார சமூக நல சபை, சர்வதேசத் தொழிலாளர் நலஸ்தாபனத்துடன் கூட்டாக, தற்காலிகக்கமிட்டி ஒன்றை நியமித்து கட்டாய வேலைப் பிரச்னையை ஆராயும்படி பணித்தது. உல கில் இருவகையான கட்டாய வேலை முறை இருந்து வருவதாக அந்தக் கமிட்டி தெரிவித்தது. அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவது அல்லது அரசியல் கருத்துக்கள் கொண் டிருப்பது அல்லது அவற்றை வெளியிட்ட குற்றத்திற்காகவோ தண்டிக் கும் வகையில் கட்டாய வேலை வாங்குவது என்பவை முதலாவது வகை யாகும். இரண்டாவது வகை—முக்கிய பொருளாதார காரியங்களை முகாந் திரமாகக் கொண்டு கட்டாய வேலைக்குட்படுத்துவதாகும். இந்தக் கட்டாய வேலை முறைகள், சாஸனமும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பும் பிரகடனஞ் செய்யும் ஆதார உரிமைகளை மீறுபவை என்று அந்தக் கமிட்டி கருத்துத் தெரிவித்தது.

1957 ஜூன் மாதத்தில் கூடிய சர்வதேசத் தொழிலாளர் நல மகா நாடு கட்டாய வேலை முறையை விலக்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றை அங்கீகரித்தது. கட்டாய வேலை அல்லது பலாத்காரத்தின் மூலமான கட்டாய வேலையை எந்த வடிவிலும் வைத்திருப்பதில்லை என்றும் அனுமதிப்பதில்லை என்றும் ஒப்பந்த நாடுகள் உறுதி கூறியுள்ளன. (அ) அரசியல் நிர்ப்பந்தத்தாலோ கல்வி முறையாலோ அல்லது, நாட்டில் நிலைபெற்றுள்ள அரசியல், சமூகப் பொருளாதார முறைக்கு எதிரான கருத்துக்களையோ அரசியல் அபிப்ராயங்களையோ வைத்திருப்பதற் காகவோ வெளியிட்டதற்காகவோ தண்டனை வழங்கும் முறையாலோ கட்டாய வேலை முறையைக் கைக்கொள்வதில்லை. (ஆ) பொருளாதார அபிவிருத்தி காணும் நிமித்தம் கட்டாய வேலை முறையை உபயோகிப்ப

108840
N6031

தில்லே, கட்டாயமாக விதித்தும் வேலே வாங்குவதில்லே. (இ) தொழிலாளருக்கிடையே ஒழுங்குக்கட்டுப்பாடு என்ற பெயரில் கட்டாய வேலே முறையை அனுசரிப்பதில்லே. (ஈ) வேலே நிறுத்த நடவடிக்கையில் கலந்துகொண்டதற்கான தண்டனேயாக கட்டாய வேலே வாங்குவதில்லே. (உ) இனம், சமூகம், தேசியம், மதம் சம்பந்தமான பாரபட்சத்தைக் காட்டுவதற்கான வழியாக கட்டாய வேலே வாங்குவதில்லே; தவிர இங்கே விவரணம் செய்யப்பட்டுள்ள கட்டாய வேலே முறை அனேத்தையும் உடனடியாகவும் முற்றிலுமாகவும் அகற்றிவிடுவதற்கு மேலும் செயலான நடவடிக்கைகளே மேற்கொள்ள ஒப்பந்த நாடுகள் இணங்கியுள்ளன.

இந்த சாஸனத்தின் பூர்வ பீடிகையில் 6-வது ஷரத்தில் கண்டிருப்பதாவது: "ஐக்கிய நாடுகள் சாஸனத்திலும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிலும் காணப்படும் மனித உரிமைகளே மீறுவதான கட்டாய வேலே முறைகள் சிலவற்றை அகற்றுவதற்கு மேலும் யோசனேகள் பலவற்றை ஏற்பதென்று நிச்சயித்திருப்பதினுல்"

வேலே வாய்ப்புகளிலும் தொழிலிலும் வேற்றுமை காட்டுவது:

இவ்விஷயம் பற்றி 1958-ம் ஆண்டில் சர்வதேசத் தொழிலாளர் மகாநாடு சாஸனம் ஒன்றை ஏற்றது; இதன்படி ஒவ்வொரு நாடும் வேலேயிலும் தொழிலிலும் எல்லோருக்கும் சம வாய்ப்பு அளித்து அது சம்பந்தமான பாரபட்சத்தைப் போக்குவதற்குரிய தொரு தேசியக் கொள்கையை அனுசரிக்க கட்டுப்பட்டுள்ளன. இந்த சாஸனத்தின் பூர்வ பீடிகையில் ஐந்தாவது பாரா "பாரபட்சம் காட்டுவதென்பது, மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பில் காணும் உரிமைகளே மீறிய செய்கை" என்று கூறுகிறது.

பிராந்திய ஒப்பந்தங்களும் இதர பிரகடனங்களும்:

மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பும் அதன் தனி ஷரத்துக்களும் பல்வேறு பிராந்திய ஒப்பந்தங்களிலும் பல தேச உடன்படிக்கைகளிலும் பிரகடனங்களிலும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

ஐரோப்பிய சாஸனம்:

மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியவற்றை பேணிப் பாதுகாப்பதற்கான சாஸனத்தை 1950-ல் ரோமாபுரியில் கூடிய ஐரோப்பிய சபையின் ஆலோசனேக் குழு ஏற்றுக்கொண்டது. உலக அறிவிப்பில் காணப்படும் சில உரிமைகளே அமலுக்குக் கொண்டு வருவது அந்த சாஸனத்தின் நோக்கம். சாஸனத்தின் வாசகம்

ஓரளவு, உலக அறிவிப்பையே ஆதாரமாகக் கொண்டு உருவானது; சாஸனத்தின் பூர்வ பீடிகை இம்மாதிரி துவங்குகிறது.:-

"ஐக்கிய நாடுகளின் மகா சபை 1948 டிசம்பர் 10-ந் தேதியன்று பிரகடனம் செய்த மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பை கருத்திற்கொண்டும்,

"அந்த அறிவிப்பில் காணப்படும் உரிமைகளை உலக மெங்கும் அமல் செய்து அவற்றுக்கு மதிப்பு ஏற்படும்படிச் செய்வது தான் நோக்கம் என்பதை கருத்திற் கொண்டும்"

அந்த பூர்வ பீடிகை கீழ்க்கண்டவாறு முடிவடைகிறது:–

"ஒரே மாதிரியான மனப்பான்மையும் பொதுவான அரசியல் மரபுகளும் குறிக்கோள்களும் சுதந்திரங்களும் கொண்ட ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்கள், உலக அறிவிப்பில் காணும் உரிமைகள் சிலவற்றை கூட்டாக நிறைவேற்றிவைக்கத் தீர்மானிக்கிறோம்."

அமெரிக்க நாடுகளின் பிரகடனங்கள்:

1954-ல் காராகஸில் கூடிய அமெரிக்க நாடுகளின் மகாநாடு, "அடிப்படை மனித உரிமைகளும் கடமைகளும் இனியும் பூர்ணமாக நிறைவேறி வர வேண்டும் என்று அமெரிக்க நாடுகள் விரும்புவதாகவும் அவை ஜனநாயகப் பிரதிநிதிகளின் ஆட்சி முறையில் தான் இருக்க முடியும்" என்றும் அறிவித்தது.

"1. மனிதனின் உரிமைகள்–கடமைகள் பற்றிய அமெரிக்கப் பிரகடனத்திலும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிலும் காணும் மனித உரிமைகளை அமெரிக்க நாடுகள் உறுதியுடன் நிறை வேற்றி வைப்பதென்று உறுதி பூண்டிருக்கிறது.

"2. அமெரிக்க ராஜ்யங்கள், தமது சட்டங்களை மனித உரிமைகள் கடமைகள் பற்றிய அமெரிக்கப் பிரகடனத்திலும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிலும் காணும் உரிமைகளுக்குத் தகுந்த மாதிரி திருத்த வேண்டுமென சிபார்சு செய்யத் தீர்மானித்தது. அந்த நாடுகள் தமது ஆதிபத்திய உரிமையின் வரம்பிற்குட்பட்டு, தத்தம் அரசியல் சட்ட வசதிகளை அனுசரித்து, அந்த உரிமைகளை ஏற்பதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்வதென்றும் மகா நாடு தீர்மானிக்கிறது."

ஆசிய ஆப்ரிக்க மகாநாட்டின் அறிக்கை

1955-ல் பாண்டுங்கில் நடந்த ஆசிய ஆப்ரிக்க மகாநாடு, "ஐக்கிய நாடுகள் சாஸனத்தில் காணும் மனித உரிமைகளின் அடிப்படை கொள்கைகளைப் பூர்ணமாக ஆதரித்து, எல்லா வகை மக்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான சாதனைத்தரமாக 'மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பை' மகாநாடு கருதுகிறது."

ஜப்பான் சமாதான உடன்படிக்கை

ஜப்பானுடன் சமாதான ஒப்பந்தம் 1951-ல் சான் பிரான்ஸிஸ்கோவில் கையெழுத்தாயிற்று. அந்த ஒப்பந்தத்தின் பூர்வ பீடிகையில் "மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு ஜப்பான் முயன்று வரும்" என்று கண்டிருக்கிறது.

டிரியஸ்டிற்கான தனி சாசனம்

1954-ல் டிரியஸ்ட் சுயேச்சை பிராந்தியம் சம்பந்தமாக இத்தாலி, பிரிட்டன், அமெரிக்கா, யூகோஸ்லேவியா ஆகியவற்றுக்கிடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அந்த உடன்பாட்டோடு தனி சாசனம் ஒன்றும் இயற்றப்பட்டது. அதன் முதலாவது ஷரத்து கூறுவதாவது:—

இத்தாலிய அதிகாரிகளும் யூகோஸ்லேவிய அதிகாரிகளும் தத்தம் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பிராந்தியங்களை நிர்வகிக்கையில், 1948 டிசம்பர் 10-ந் தேதியன்று ஐக்கிய நாடுகள் மகா சபை ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிற்கிணங்க செயலாற்ற வேண்டும். இரு நிர்வாகங்களுக்கும் உட்பட்ட பகுதி மக்கள் வேற்றுமை எதுவுமின்றி அறிவிப்பில் காணும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் முழுதுமாக அனுபவிக்க வசதியிருக்க வேண்டும்.

பிரஞ்சு — டுனிசிய ஒப்பந்தம்:

பாரிஸ் மா நகரில் 1955-ல் பிரான்ஸும் டுனிசியாவும் ஒப்பமிட்ட பொது ஒப்பந்தத்தின் ஐந்தாவது ஷரத்து கூறுவதாவது:— டுனிசியப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும், மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பில் காணும் உரிமைகளையும் தனி உத்திரவாதங்களையும் டுனிசியா வழங்குகிறது.

அரசியல் அமைப்புகளும் சட்டங்களும்

உலக அறிவிப்பு பிரகடனமானதற்குப் பின்னர், பல நாடுகளில் புதிய அரசியல் அமைப்புச் சட்டங்கள் அமலுக்கு வந்துள்ளன; இந்த

அடிப்படைச் சட்டங்களை உருவாக்கியவர்கள்—அரசியல் நிர்ணய சபையினராயினும் சட்ட சபையினராயினும் சரி, மனித உரிமைகள் ஆதார சுதந்திரம் பற்றிய ஷரத்துக்களை வரைகையில் உலக அறிவிப்பைக் கருத்திற் கொண்டார்கள். தேசீயச் சட்டங்கள் உத்திரவுகள் சமீப காலத்தில் உலக அறிவிப்பையோ அதன் ஷரத்துக்களையோ மேற்கோளாகக் காட்டுகிறது.

அரசியல் அமைப்புகள்

ஜெர்மன் பெடரல் குடியரசின் அடிப்படைச் சட்டம் 1949-ல் பிரகடனம் செய்யப்பட்டது; 'திருமணமும் குடும்பமும் அரசாங்கத்தின் விசேஷப் பாதுகாப்பிற்குரியவை' என்று 6-வது ஷரத்தும் "யாருக்கும் ஜெர்மன் நாட்டியல் மறுக்கப்படாது" என்று 16-வது ஷரத்தும் கூறுகின்றன. அடிப்படைச் சட்டத்தில் ஆன இந்த ஷரத்துக்கள் உலக அறிவிப்பின் 15,16-வது ஷரத்துக்களில் அடிப்படையானவை. 5 பெடரல் கான்ஸிடிடியூஷன் கோர்ட் 1 BUL 154 (1957 ஜனவரி 17, 1957)

இப்போது ஹைத்தீயில் அமலாகி வரும் அரசியல் அமைப்புச் சட்டம் 1950-ம் ஆண்டில் பிரகடனமாயிற்று. அந்நாட்டு அரசியல் நிர்ணய சபையின் தலைவர் டாண்டி பெல்லிகீரர்டி சொன்னது குறிப்பிடத் தக்கது. "இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் மனித உரிமைகள் சம்பந்தமாக உள்ள ஷரத்துக்கள் உருவாவதற்குப் பெரும்பாலும், 1948 மே மாதம் 2-ந் தேதி போகாட்டாவில் கையெழுத்தான மனிதனின் உரிமைகள் பற்றிய அமெரிக்கப் பிரகடனமும் 1948 டிசம்பர் 10-ந் தேதி பாரிஸில் பிரகடனமான மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பும் முக்கியமாக ஆர்வ மூட்டின."

இதேமாதிரி இந்தோனிசீயாவின் தற்காலிக அரசியல் சட்டமும் (1950) லிபியாவின் அரசியல் சட்டமும் (1951) எதியோப்பாவின் சுயாட்சி பகுதியான எரிட்ரியாவின் அரசியல் சட்டமும் (1952) பெருமளவு, உலக அறிவிப்பில் மூல உருவானவை எனலாம்.

டோஜோலந்து (1958 பிப்ரவரி 22) சட்டத்தின் முதலாவது ஷரத்துப்படி பிரஞ்சு நிர்வாகத்தில் உள்ள டோஜோலந்து டிரஸ்ட் பகுதி "மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிலும் பிரஞ்சு குடியரசு அரசியல் சட்டத்தின் பூர்வ பீடிகையிலும் காணும் கொள்கைகளையும் சர்வதேச ஒப்பந்தங்களை மதிக்கும் மரபையும் ஆதாரமாகக் கொண்ட குடியரசாக இருக்கும்."

1951-ம் ஆண்டில் பராகுவே அரசாங்கம் இயற்றிய சட்டப்படி விஞ்ஞானம், இலக்கியம், சம்பந்தமான படைப்புக்களைப் பேணி பாதுகாப்பதற்கும் அறிவியல் உரிமைகள் சம்பந்தமான பொதுப் பதிவுப் புத்தகம் ஒன்றை வைத்துக் கொள்வதற்கும் வகை ஏற்பட்டது. 'ஒவ்வொருவருக்கும் தங்களால் வெளியிடப்பட்ட அரசியல் விஞ்ஞான இலக்கிய உண்மைகளினால் வரும் பெயரையும் பொருளையும் பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு' என்று உலக அறிவிப்பின் 27-வது ஷரத்து 2-வது பிரிவை, அந்த கூட்டத்தின் பூர்வ பீடிகை மேற்கோளாகக் காட்டுகிறது.

கனடாவில் ஒண்டாரியோ மாகாண சட்ட சபை, வேலை சம்பந்தமாக நியாயமான பழக்க வழக்கங்களை அமலுக்குக் கொண்டு வருவதற்கென 1951-ம் ஆண்டில் சட்டமொன்றும், வீடு வசதிகள் நியாயமான வகையில் கிட்டுவதற்கென 1954-ல் சட்டமொன்றும் இயற்றப்பட்டது. ''இனம், கொள்கை, நிறம், தேசீயஇனம், வந்தவழி, மூல இடம் ஆகியவை சம்பந்தமான வேற்றுமை அகற்றுவதே இந்தச் சட்டத்தின் நோக்கம்''. ஒவ்வொரு சட்டத்தின் பூர்வ பீடிகையிலும் அந்த சட்டம், ''ஐக்கிய நாடுகள் பிரகடனம் செய்த மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிற்கு இணங்கவே'' இயற்றப்பட்டதெனக் கண்டிருக்கிறது.

ஆர்ஜென்டீனுவில் 1955-ம் வருஷத்தில் சட்ட சபை உத்திரவு ஒன்றை பிறப்பித்தது. அரசியல் காரணங்களுக்காகத் தண்டிக்கும் வகையில் யாருக்கும் நாட்டியலை மறுப்பதென்பது ஐக்கிய நாடுகள் மகா சபை பிரகடனஞ் செய்த மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிற்கு முரணுனது என்று அந்த உத்திரவு பூர்வ பீடிகையில் கூறப்பட்டிருக்கிறது.

தேசியக் கல்வித் திட்டம் ஒன்றை அமுலுக்காவதற்காக 1955-ல் பொலீவியா அரசாங்கம் ஒரு சட்ட உத்திரவு ஒன்றை (1937) பிறப்பித்தது. பொலீவியா மக்கள் அனைவருக்கும் வேற்றுமை எதுவுமின்றி சம வாய்ப்புக்கள் இருக்க வேண்டுமென்ற குறிக்கோளை அந்த உத்திரவின்

சர்வதேச நீதி மன்றத்தில் புகலிடம் தருவதான வழக்கு (1950) பிரிட்டன்–ஈரான் வழக்கு (1952) நாட்டிம்போம் வழக்கு (1955) ஆகியவற்றில் எதிர்ப்புக் குறிப்பில் உலகப் பிரகடனத்தின் ஷரத்துக்கள் குறிப்பிடப் பட்டிருந்தன. அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் லிங்கன் யூனியன்–வட மேற்குக் கம்பெனி வழக்கு, அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம்–அமெரிக்க சாஸ்டோர் அண்டு கம்பெனி (1949) ஆகியவற்றின் ஏற்புக் கருத்திலும் உலகஅறிவிப்பின் ஷரத்துக்கள் பிரஸ்தாபித்திருந்தன. பியூஜி–காலிபோர்னியா வழக்கில், காலிபோர்னியா ஜில்லா அப்பீல் கோர்ட்டிலும் (1950) பின்னர் காலிபோர்னியா சுப்ரீம் கோர்ட்டிலும் தீர்ப்புகளிலும், நாட்டியல் வழக்கு ஒன்றின் தீர்ப்பிலும் (1951)–ம் வருஷத்தில் பெல்ஜியம் சிவில் கோர்ட்டின் தீர்ப்பிலும் உலக அறிவிப்பின் ஷரத்துக்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

பூர்வ பீடிகை ஊர்ஜிதஞ் செய்கிறது; தேசீயக் கல்வித் திட்டமும் மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிலிருந்து ஊக்கமும் ஆக்கமும் பெற வேண்டும் என்று அது தெரிவிக்கிறது.

பனாமா அரசாங்கம் அதன் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21-வது ஷரத்தை அமல் செய்து வைப்பதற்காக 1956-ல் சட்டமொன்றை இயற்றியது. பிறப்பு, இனம், வந்த வழி, பால், மதம் அல்லது அரசியல் கருத்து அவற்றின் காரணமாக வேறுபாடு ஏதும் இருக்கலாகாது என அந்த சட்டம் கூறுகிறது. நிறம் அல்லது இனம் காரணமாக காட்டப்படும் வேற்றுமை எதுவும் ''பனாமா அரசியல் சட்டத்தின் 21-வது ஷரத்துக்கும், 1948-டிசம்பர் 10-ந் தேதியன்று ஐக்கிய நாடுகள் மகா சபை அங்கீகரித்த மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பிற்கும் முரணானதாகும்'' என்று பூர்வ பீடிகை கூறுகிறது.

நியாயத் தீர்ப்புகளும் அபிப்ராயங்களும்

பல்வேறு நீதி மன்றத் தீர்ப்புகளிலும் கருத்துக்களிலும் உலக அறிவிப்போ அல்லது அதன் தனி ஷரத்துக்களோ மேற்கோளாகக் காட்டப்படுகிறது; சட்டப் பூர்வமான கருவியாயிராத சர்வதேசப் பிரகடனம் ஒன்றை உள்நாட்டு சட்டப் பிரச்னை ஒன்று சம்பந்தமாக தனது கருத்திற்கு ஆதரவாகக் குறிப்பிடுவதென்பது அபூர்வமாகும். உதாரணமாக இங்கு ஐந்து தீர்ப்புகள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றன; அவை ஐந்து நாடுகளில் நடந்துள்ள ஐந்து வெவ்வேறு பிரச்னைகள் பற்றியவை.

தொழிலாளர் யூனியன்கள் பாலின் அடிப்படையில் வேற்றுமை பாராட்டி வந்ததை நியூயார்க் சுப்ரீம் கோர்ட் ஆட்சேபகரமானதென தீர்ப்பளித்தது. வில்சன்–ஹாக்கர் வழக்கில் (1950) இந்தத் தீர்ப்பு வெளியாயிற்று; பாலின் அடிப்படையிலான பாரபட்சத்தை சட்டம் எதையும் கருத்திற் கொள்ளாமல், அடிப்படைக் கொள்கையை மீறியதாக சொல்லலாமா? இந்தக் கொள்கையைக் கருத்திற்கொண்டு யூனியனின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தீர்ப்புக் கூறலாமா என்று, அந்த நீதி மன்றம் ஆராய்ந்து தீர்ப்பு சொல்லிற்று; இது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் கூறுவதாவது:– ''ஐக்கிய நாடுகள் மகா சபையின் 3-வது கூட்டத் தொடரில் 1948-ம் அங்கீகாரமான மனித உரிமைகள் பற்றிய அறிவிப்பின் ஷரத்துக்கள் நவீன காலத்திய மனோபாவத்தைக் காட்டுகிறது. உலக அறிவிப்பின் உண்மைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உற்ற உரிமைகளாகும். இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கொள்கை, அல்லது பிறந்த சமூக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு, வளம், குடி, பிறப்பு அல்லது

பிறவகைச் செல்வாக்கு இவைகளில் ஒன்றையும் கருதாமல் உலக அறிவிப்பில் அடங்கிய எல்லா வகையான உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லோருக்கும் பொது உரிமைகளாகும். அறிவிப்பின் 23-வது ஷரத்தில் கண்டிருப்பதாவது: "ஒவ்வொருவருக்கும் தமக்கு விருப்பமான வேலையில் அமர்வதற்கும் நலந் தரும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உரிமை உண்டு."

பிலிப்பைன்ஸின் சுப்ரீம் கோர்ட் 1951-ல், போரேவஸ்கி–குடியேற்றக் கமிஷனர், சிறைக்கூடங்களின் டைரக்டர் சம்பந்தமான வழக்கிலும் மீஜாப்–சிறைக்கூட டைரக்டர் வழக்கிலும் முக்கியமான தீர்ப்புகள் வெளியாயின. பகைவராக இல்லாத வெளி நாட்டினர் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்திரவு பெற்றவராயினும் சரி—அவர் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்படாதிருந்தாலோ—நியாய உத்திரவு பிறப்பிக்கப்படாதிருந்தாலோ—காலவரையின்றி காவலில் வைத்திருக்கக் கூடாது; சட்ட பூர்வமான வழிகளில் அல்லாது, எந்த நாட்டியலைச் சேர்ந்தவருடைய சுதந்திரத்தையும் பறிக்க முடியாது. அந்த கோர்ட் சொல்வதாவது:– "பிலிப்பைன்ஸ் (அதன் அரசியல் அமைப்புச் சட்டத்தில் 2-வது ஷரத்து 3-வது பகுதியில்) சர்வதேச சட்டத்தை, உலக நாடுகளின் சட்டத்தின் பகுதியாக பொதுவில் ஏற்றுக் கொண்டுள்ளது. பிலிப்பைன்ஸ் நாடு அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் மகாசபை 1948-ல் டிசம்பர் 10-ந் தேதியன்று அதன் முதல் கூட்டத்தில் 'மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பு' என்ற தலைப்பில், எல்லா மனிதருக்கும் உரிமைகள், சுதந்திரங்கள் விஷயமாக உள்ள உரிமைகளையும் மற்ற அடிப்படை உரிமைகளையும் பிரகடனஞ் செய்தார்கள். 'பிறப்பாலும் பெருமையாலும் உரிமையாலும் மக்கள் எல்லோரும் ஒத்த நிலையுடையவர்களே" (ஷரத்து 1); 'உலக அறிவிப்பில் கண்ட உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடமைகளாகும். இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கொள்கை அல்லது பிறவகைக் கொள்கைகள் பிறந்த நாட்டியல்பு அல்லது பிறந்த சமூக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு, வளம், குடிப் பிறப்பு அல்லது பிறவகைச் செல்வாக்கு இவைகளில் ஒன்றையும் கருதாமல் உலக அறிவிப்பில் அடங்கிய எல்லா வகையான உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவுடமைகளாகும்." (ஷரத்து2); "அரசியலமைப்பு அல்லது சட்டம் என்ற இவை வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு முரணாகத் தோன்றும் கொள்கைகளுக்குத் தகுதி மிகு நாட்டியல் நடுவர் குழுவால் (Tribunal) பரிகாரம் தேடிக்கொள்ள உரிமையுண்டு. (ஷரத்து 8); "நினைத்தபடி

கைது செய்தல், காரணங்காட்டாது சிறையில் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படார்.'' (ஷரத்து 9).

நெதர்லந்தில் சுப்ரீம் கோர்ட்டில் 1951-ல் பத்திரிகை சுதந்திரம் பற்றிய வழக்கு ஒன்று வந்தது. பத்திரிகை சுதந்திரம் உட்பட அரசியல் சட்ட உரிமைகள், இனியும் உறுதியான உரிமைகள் அல்ல என்றும், பொது நலனை முன்னிட்டு அந்த உரிமைகளை மேலும் கட்டுப்படுத்துவது தான் நவீன காலப் போக்கு என்றும் அந்த வழக்கில் வாதாடிய சர்க்கார் வக்கீல் கூறினர். ''அரசியல் சட்ட உரிமைகளை பலவீனப் படுத்துவது தான் நவீன காலப்போக்கு என்று சொல்வதை சரியல்ல என்பதை 1948 டிசம்பர் 10-ந் தேதி ஐக்கிய நாடுகள் மகா சபை ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பு நிரூபிக்கிறது'' என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கூறிற்று.

பெல்ஜியத்தில், கோர்ட்டுராய் என்றவிடத்தில் மனநோய் சிகிச்சைக் கழகத்தில் ஒரு மாது அவளது தாய் விருப்பத்திற்கு எதிராக தந்தையின் மனுவின் பேரில் சேர்க்கப்பட்டிருந்தாள். அவளது மனநிலையை நிபுணர்கள் வாயிலாக அறிந்து கொண்ட நீதிபதி 1954 ஜுன் பத்தாந் தேதியன்று, உடனடியாக அந்த ஸ்திரியை விடுதலை செய்ய உத்திர விட்டார். அவர் தமது தீர்ப்பிற்கு ஆதரவாக உலக அறிவிப்பின் மூன்ருவது ஷரத்தைக் குறிப்பிட்டார். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை, விடுதலை, உடற்பாதுகாப்பு இவைகளில் உரிமையுண்டு' என்று அந்த ஷரத்து கூறுகிறது; 1956-ல் அதே கோர்ட்டின் நீதிபதி இரண்டு உத்திரவுகளை பிறப்பித்து அவற்றில் உலக அறிவிப்பின் அதே ஷரத்துக்களைக் குறிப்பிட்டார். புத்தி சுவாதீனமற்றவர்கள் என்று சொல்லி காவலில் வைக்கப்பட்ட இரண்டு பேர்களை நிபுணர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கூறினர்.

1954-ல் இடாலியில் டாரண்டோ நீதி மன்றம் வெளியிட்ட தீர்ப்பும் குறிப்பிடத்தக்கது. ''பிரஜா உரிமையை முக்கியமாக, மனமுவந்து ஏற்கும் உறவு நிலையாக மதிப்பதே இன்றைய போக்கு. தனி மனிதனின் மன உறுதி சுயேச்சைக் கொள்கையை ஏற்று, அவன் தன்னிச்சைப்படி தனது வாழ்வை உருவாக்கிக் கொள்வதற்கென படைத்துள்ள உரிமையை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இந்த மனேபாவத்தை பிரதிபலிப்பது தான்—1948 டிசம்பர் 10-ந் தேதியன்று பாரிஸ் நகரில் கூடிய ஐக்கிய நாடுகள் மகா சபை அங்கீகரித்த மனித உரிமைகள் பற்றிய அறிவிப்பின் 15-வது ஷரத்து. (''நாட்டிய்லில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. எவரும் தம் நாட்டியலில் தான்தோன்றித்

தனமாக மறுக்கப்பட்டார்.") இந்த அறிவிப்பிற்கு சட்டத்திற்குரிய வலு இல்லையென்றாலும், அறிவிப்பின் ஷரத்துக்கள் மிக உன்னதமான அற நெறிக் கோட்பாடுகளாகும் என்பதில் சந்தேகமில்லை.'' என்று டாரண்டோ நீதிபதி தமது தீர்ப்பில் கூறினர்.

முடிவுரை:

இந்த நூலில் அறிவிப்பைப்பற்றி முழுதும் விரிவாக எடுத்துச் சொல்வது சாத்தியமல்ல. பத்தாண்டுகட்கு முன்னால் பிரகடனமான இந்த உலக அறிவிப்பு, "எல்லா நாடுகளுக்கும் மக்களுக்கும் பொதுவான தொரு சாதனைத்தரமாகத் திகழ்கிறது'' என்பதோடின்றி அது ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகளையும் தனி அரசாங்கங்களையும் ஊக்குவிக்கும் சக்தியாக விளங்குகிறது என்பதைக் காட்டுவதே இதன் நோக்கம். இன்னும் பல்லாண்டுக்காலம் இந்த உலக அறிவிப்பு தேசீய ஸ்தாபனங்களுக்கும் சர்வ தேச ஸ்தாபனங்களுக்கும் இனியும் ஆர்வ மூட்டவல்ல தாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அறிவிப்பின் மூலம் சட்டங்கள் உருவாவதைவிட இன்னும் முக்கியத்வம் வாய்ந்தது — உலகம் பூராவிலும் பரவிக்கிடக்கும் சாதாரண ஆண் பெண்கள் மனதில் தோன்றியுள்ள அபிலாஷைகளாகும். தேசீய ஸ்தாபனங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் அவர்களது நலனுக்கானவையே; அதே போல அறிவிப்பும் அவர்களுக்கெனவே வரையப்பட்டது. தமக்கு இன்னின்ன உரிமைகளும் சுதந்திரங்களும் உண்டு என்பதை சாதாரண மக்கள் எப்போதும் உணர்ந்து அதற்கு தகுந்தபடி செயலாற்ற வேண்டும். இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் மதிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் தாம் வற்புறுத்த வேண்டும். இதனால் மகா சபை, உலக அறிவிப்பைப் பிரகடனம் செய்கையில் "ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு சமுதாய உறுப்பும்'' "அறிவிப்பை எப்போதும் மனதிற்கொள்ள வேண்டும்'' என்றும் "இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் போதித்தும் பயின்றும்'' அவற்றுக்கு மதிப்பை பெருக்க வேண்டுமென்று கூறுகிறது.

இந்த உலக அறிவிப்பு மா பெரும் தஸ்தாவேஜீ; ஊக்க மூட்டும் பத்திரம்; ஆனல் மனித உரிமைகள் சம்பந்தமாக இது அறுதியானதல்ல; ஒவ்வொரு பெரும் சட்டமும் அந்தந்தக் காலத்தின் மாபெரும் சிருஷ்டி. அதே மாதிரி இந்த அறிவிப்பும் அத்தகைய தொன்றே தவிர வேறல்ல. இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியினரின் மனோபாவத்தைக் காட்டுகிறது. இந்த யுகத்தின் வெவ்வேறான இனங்களும் கலாசாரங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் கொள்கைகளை ஒருங்கே கொண்டது. மனிதன் மேன்மேலும் முன்னேறியதும் இன்னும் விரிவான சுதந்திரத்

துக்கான வாய்ப்பையும் இன்னும் பூர்ணமானதும் சீரானதுமான வாழ்வையும் — இப்போது அவற்றை கனவு காண முடியாததென்றும் கண்டு கொள்ளவே செய்வான். இப்போதுள்ளதைவிடவும் கடந்த காலத்திலிருந்ததையும்விட விரிவானதும் மேலும் ஆர்வமூட்டவல்ல வாசகத்திலுமானதுமான பிரகடனங்கள் வருங்காலத்தில் உருவாகவே செய்யும்.

வருங்காலம் எப்படி மதிப்பிட்டாலும் சரி, மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம், இந்த யுகத்து ஆண் பெண்கள் அனைவருடைய உன்னத லட்சியத்தையும் பிரதிபலிப்பதாகச் சொல்லலாம்; இன்னின்ன மாதிரி இருக்க வெண்டும் என்பதை அறிவிக்கிறது அது; இப்போது உள்ளதை அது படம் பிடித்துக் காட்டுவதாகாது; உலக அறிவிப்பு சாதனைக்குரிய தொரு தரம் என்ற வகையில் அது ஒரு சவாலாயும் குறிக்கோளாயும் இருக்கிறது. அந்த லட்சியத்தை அடையவோ சவாலை ஏற்கவோ எல்லா மக்களும் நாடுகளும் ஒன்றுபட்டு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பு

தோற்றுவாய்

மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இயல்பாக அமைந்துள்ள பெருமையும், மாற்றவே முடியாத சரிநிகர் சம உரிமைகளும் இவையெனத் தெளிதலே உலக விடுதலைக்கும், நேர்மைக்கும், அமைதிக்கும் அடிப்படையாதலாலும்,

மக்கள் உரிமைகளைப் புறக்கணிப்பதும், மறுப்பதும் காட்டுமிராண்டிச் செயல்கள் விளைவதற்குக் காரணமாவதோடு அமையாமல் மக்களுடைய மனச் சான்றையும் கொதிக்குமாறு செய்துவிடுதலாலும், பேச்சுரிமை சமயக் கோட்பாட்டுரிமை, அஞ்சாமை உரிமை, வாழ்க்கைத் தேவை உரிமை இவைகளைத் தடையின்றிப் பெற்று இன்புறுவதற்கு ஏற்ற ஒரு புத்துலகத்தைத் தோற்றுவிப்பதே பொதுமக்களுடைய பெரு வேட்கையாதலாலும்,

கொடுங் கோன்மை, அடக்குமுறை இவைகளை எதிர்த்துப் புரட்சிக் கலகம் செய்வதன்றி வேறு வழியில்லை யென்று, துணியும் நிலையை ஒருவருக்கு ஆக்கக்கொடாது இருக்க வேண்டுமானால் மக்களுடைய உரிமைகளைத் தக்க சட்டங்களின் மூலம் பாதுகாத்தல் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

பல்வேறு நாடுகளுக்கிடையே கேண்மையை வளர்த்து அவற்றை உறவு நாடுகளாக்குதல் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

மக்களுடைய அடிப்படை உரிமைகளிலும், தனிஒருவருடையபெருமை தகுதி இவைகளிலும், ஆண் பெண் இவர்களின் சரிநிகர் சமஉரிமைகளிலும் தமக்குள்ள நம்பிக்கையைத் தாம் வழங்கிய உலக அறிவிப்பில் ஐக்கிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உறுதிப்படுத்தி உள்ளமையாலும், சமூக முன்னேற்றம் வாழ்க்கை நிலை இவைகளை மேலும் மேலும் உரிமை நல்கி உயர்த்துவதாக அவர்கள் துணிந்து உள்ளமையாலும்,

மக்கள் உரிமைகளையும் அடிப்படை விடுதலைகளையும் வழங்கும் முறைகளைக் கடைபிடிக்க, உறுப்பு நாடுகள் ஐக்கிய நாடுகளோடு ஒத்துழைக்க உறுதி மொழி எடுத்துக் கொண்டுள்ளமையாலும்,

இந்த உறுதி மொழியை முழுமையும் நிறைவேற்றி வைக்க மக்களுக்குரிய உரிமைகளும், விடுதலைகளும் இவை இவையென எல்லாரும் ஒரே வகையாக அறிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாது வேண்டப்படுதலாலும்,

பொதுப் பேரவை

(GENERAL ASSEMBLY)

பல்வேறு வகைப்பட்ட இனத்தவர்களும் பல்வேறு வகைப்பட்ட நாடுகளும் தம் தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் துணை செய்யும் ஆற்றல் அமைந்த ஒரு சிறந்த கருவியாக மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பை வழங்கி இந்த உறுதி மொழி அறிவிப்பை எப்பொழுதும் நினைவில் இருத்திக்கொண்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் உறுப்பாக அமையும் தகுதி பெற்ற ஒவ்வொருவரும், அறிவுறுத்தலாலும், பயிற்சி கொடுத்தலாலும் தனி நாட்டு இயல், அனைத்து நாட்டு இயல் இரண்டிற்கும் ஒத்த முன்னேற்ற முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருதலாலும், மக்களுக்குரிய உரிமைகளையும் விடுதலைகளையும் குறித்த நன் மதிப்பைப் பெருக்கி, உறுப்பு நாடுகளின் குடிகளும், அவற்றின் ஆட்சிக்குட்பட்ட குறுநிலக் குடிகளும் மக்களும் உரிமை விடுதலை இவைகளின் பயன்களை நன்ருக அறிந்து அவற்றைக் கடைபிடிக்கும் நிலையை ஏற்படுத்தல் வேண்டுமென்று அறிவிக்கின்றது.

பிரிவு 1. பிறப்பாலும் பெருமையாலும் உரிமையாலும் மக்கள் எல்லோரும் ஒத்த நிலையுடையவர்களே. அவர்கள் இயற்கையிலேயே பகுத்தறிவும் மனச்சான்றும் பெற்றுள்ளார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் உடற் பிறப் புணர்ச்சியோடு பழகல் வேண்டும்.

பிரிவு 2.–(1) மேற்படி உலக அறிவிப்பில் கண்ட உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடமைகளாகும். இனம், நிறம், பால், மொழி, சமயம் அரசியல்–கொள்கை, அல்லது பிற வகைக் கொள்கை, பிறந்த நாட்டியல்பு அல்லது பிறந்த சமூக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு, வளம், குடிபிறப்பு அல்லது பிறவகைச் செல்வாக்கு இவைகளில் ஒன்றையும் கருதாமல் மேற்படி உலக அறிவிப்பில் அடங்கிய எல்லா வகையான உரிமைகளும், விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவுடமைகளாகும்.

(2) சாகியம், நிறம், ஆண் பெண் வேற்றுமை, மொழி, சமயம் காரணமாக அல்லது அரசியல் சம்பந்தமான அல்லது வேறுவிதமான

அபிப்பிராயம் காரணமாக, அல்லது இன்ன தேசத்தில் அல்லது இன்ன சமுதாயத்தில் இருந்து வந்தமை காரணமாக, அல்லது ஆதனம் அல்லது பிறப்புக் காரணமாக, அல்லது வேறேதும் அந்தஸ்து காரணமாக எவ்விதமான பேதமும் இல்லாது சகல உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்க ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

மேலும், ஒருவருடைய தேசம் அல்லது ஊர் சுதந்திரமுடையதாயினும் சரி, அதன் பரிபூரண சுதந்திரத்துக்கு எவ்விதமான கட்டுப்பாடுடையதாயினும் சரி, அதனுடைய அரசியல் நிலைமையையேனும் நியாயாதிக்க நிலைமையையேனும் சர்வதேசிய நிலைமையையேனும் கொண்டு அதன் மக்களுடையே பாகுபாடு செய்யப்பட மாட்டாது.

பிரிவு 3. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை, விடுதலை, உடற் பாதுகாப்பு இவைகளில் உரிமையுண்டு.

பிரிவு 4. எவரும் அடிமைத்தனத்திலேயோ, அல்லது ஆட் பணியிலேயோ ஆழ்த்தப்படார். அடிமையும், அடிமை வணிகமும் எவ்வடிவில் தோன்றினும் தொடர்ந்து துடைக்கப்படும்.

பிரிவு 5. எவரும் சித்திரவதை அல்லது கொடிய கண்ணற்ற இழிந்த நடத்தைக்கோ அன்றி தண்டனைக்கோ ஆட்படுத்தப்படார்.

பிரிவு 6. சட்டத்தின் முன்பு எவரும் தம்மைப் பிறர் தம்மை எங்கும் மனிதராக மதிக்குமாறு செய்ய உரிமை பெறுவர்.

பிரிவு 7. சட்ட முன்னிலையில் யாவரும் சமமானவர்கள். அச்சட்டத்தின் பட்சபாதகமற்ற பாதுகாப்பை அவர்கள் எல்லாரும் ஏற்றத்தாழ்வின்றிப் பெற உரிமை உடையவர்களாவர். இந்த அறிக்கைக்கு விரோதமாக எவ்விதத்திலேனும் பட்சபாதகமான முறையில் மக்கள் நடத்தப்பட்டாலும் அத்தகைய பட்சபாதக முறை எவ்விதத்திலேனும் தூண்டப்பட்டாலும் அதற்கெதிராக இதனைற் பாதிக்கப்படும் சகலரும் சமத்துவமான பாதுகாப்புப் பெற உரிமையுடையவராவர்.

பிரிவு 8. அரசியலமைப்பு அல்லது சட்டம் என்ற இவை வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு முரணைகத் தோன்றும் செய்கைகளுக்குத் தகுதிமிகு நாட்டியல் நடுவர் குழுவால் (Tribunal) பரிகாரம் தேடிக்கொள்ள உரிமையுண்டு.

பிரிவு 9. நினைத்தபடி கைது செய்தல், காரணங்காட்டாது சிறையிடல் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படார்.

பிரிவு 10. ஒருவரது உரிமையைப் பற்றியோ, கடமையைப் பற்றியோ அன்றி தண்டனைக் குற்றச்சாட்டைப் பற்றியோ முடிவு செய்யு முன் சுதந்திரமான ஒருபாற் கோடாத நடுவர்குழு முன் நேர்மையான பொதுமன்றத் தீர்ப்பு வேண்ட எவருக்கும் சரிநிகர் உரிமையுண்டு.

பிரிவு 11.—(1) தற்காப்பு எதிர்வாதத்திற்கு வசதியளிக்க உறுதி கூறும் சட்ட இயல்புளி நடக்கும் பொதுமன்ற விசாரணையில் குறிப்பிட்ட குற்றம் மெய்ப்பிக்கப்படும் வரை தண்டனைக் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு குற்றமும் அற்றவர் என்றே கருதப்படுவர்.

(2) அப்பொழுதைய நாட்டியல் அல்லது அனைத்து நாட்டியல் நடைமுறைச் சட்டப்படி ஒருவருடைய செய்கையோ அன்றி செய்யாமையோ அது நிகழும் காலத்தில் தண்டனைக் குற்றமாகாதெனில் அதனை செய்தார் குற்றவாளியாகக் கருதப்படார். அன்றியும் அப்பொழுதைய விதிப்படிப் பொருந்தும் தண்டனையை விடக் கடுமையான தண்டனையும் வழங்கப் படார்.

பிரிவு 12. ஒருவனது அந்தரங்கம், குடும்பம், இல்லம், கடிதப் போக்குவரத்து ஆகியவை பிறரது நினைத்தபடி தலையீட்டுக்கு உட்படா. அன்றியும் ஒருவனது பெருமையும், புகழும் தாக்கப்படா. இத்தகைய தலையீடுகளிலிருந்து தம்மை சட்ட மூலமாகக் காத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இத்தகைய தலையீடுகள் அல்லது தாக்கல்களிலிருந்து தன்னை சட்ட மூலமாகக் காத்துக்கொள்ள ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு.

பிரிவு 13.—(1) நாட்டு எல்லைக்குள் விரும்பியவாறே எங்கும் போகவோ, குடியிருக்கவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தன் நாட்டை, அல்லது எந்நாட்டையும் விட்டு அகலவோ அவைகளுக்குத் திரும்பவோ உரிமையுண்டு.

பிரிவு 14.—(1) அலைப்புப் பிடியிலிருந்து அகலவும் பிற நாட்டை ஏற்ற புகலிடமாகத் தேடிக் கொள்ளவும், அங்கிருந்து இன்பம் நுகரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) உண்மையாகவே அனைத்து நாட்டியல் நோக்கத்திற்கும், கொள்கைக்கும் முரணாகத் தோன்றுவனவும் அரசியல் குற்றமாகாதனவுமான தொடர் வழக்குகள் பற்றி இவ்வுரிமைகள் வற்புறுத்த மாட்டா.

பிரிவு 15.—(1) நாட்டியலில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவரும், தம் நாட்டியலில் தான்தோன்றித்தனமாக மறுக்கப் படார்; அன்றியும் அதனை மாற்றிக்கொள்ளவும் தடை செய்யப்பட மாட்டார்.

பிரிவு 16.—(1) இனம், நாட்டியல், சமயம் என்ற இவைகளின் பிடிப் பிலிருந்து நீங்கி வயது வந்த ஆண் பெண் எவரும் விரும்பியவாறே மணம் புரிந்து இல்வாழ உரிமையுண்டு. அவர்களுக்குத் திருமண விடயத்திலும், மண வாழ்க்கையின் போதும், மண விலக்கு (மண முறிவு) விடயத்திலும் சம உரிமையுண்டு.

(2) மணக்க விரும்பும் இரு பாலரது சுதந்திரமான முழு இசைவும் பெற்ற பின்பே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்படும்.

(3) குடும்பம், சமுதாயத்தின் இயல்பாக அமைந்த அடிப்படைக் குழூஉ ஆதலின், அதற்குச் சமுதாயம், அரசு என்ற இவைகளின் பாது காப்பைப் பெற முழு உரிமையுண்டு.

பிரிவு 17.—(1) ஒவ்வொருவருக்கும் தனியாகவோ, சேர்ந்தோ சொத்துடைமை கொள்ள உரிமையுண்டு.

(2) முறைகேடான நிலையில் எவருடைய பொருளும் கவர்ந்து கொள்ளப் படமாட்டாது.

பிரிவு 18. ஒவ்வொருவருக்கும் தம் கொள்கையையும் எண்ணத் தையும் சமயத்தையும் பின்பற்ற உரிமையுண்டு. இந்த உரிமை, சம யத்தை மாற்றிக் கொள்ளவும், தனியாகவோ அல்லது கூடியோ சமயக் கோட்பாட்டையோ நம்பிக்கையையோ வெளிப் படுத்துவதற்கும், வழி படுவதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 19. ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும், எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமை எத்தகைய தடையு மின்றி, ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய செய்திகளையும் கருத்துக் களையும் எந்த நாட்டிலிருந்தும் எந்த முறையாலும் பெற்றுக் கொள்வதற் கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 20.—(1) ஒவ்வொருவருக்கும் அமைதியான முறையில் கூடு வதற்கும், கழகம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

(2) எந்தக் கழகத்திலும் சேரும்படி எவரையும் கட்டாயப் படுத்த உரிமையில்லை.

பிரிவு 21.—(1) ஒவ்வொருவரும் தங்களுடைய நாட்டாட்சியில் நேராகவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (Representatives) மூல மாகவோ, பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவரும் அரசியல் அலுவல்களிலே சமமான பங்கு பெற உரிமையுண்டு.

(3) உலகம் ஒப்புக்கொள்ளும் முறையில் மறைமுக வாக்குரிமை யாலோ அல்லது அது போன்ற வேறு வழி ஒன்றாலோ காலத்திற்குக் காலம் நடத்தப்படும் தேர்தல்களின் மூலம் வெளியாகும் மக்களின் எண்ணத்தின்படி ஆட்சியின் அடிப்படை அமையும்.

பிரிவு 22. ஒவ்வொருவருக்கும் நாட்டியல் முயற்சியினாலும் கூட்டு நாட்டியல் ஒற்றுமையினாலும் அந்தந்த நாட்டின் அமைப்புக்கும், பொரு ளாதார நிலைமைக்கும் தகுந்தபடி சமுதாயப் பாதுகாப்பு உறுதி அளிக்கப் படும். அதற்கேற்ப ஒருவருடைய வாழ்வும், பண்பும் உயர்வதற்கு வேண்டிய பொருளாதார, சமுதாய, கலை பண்பு உரிமைகள் காப்பாற்றப் படும்.

பிரிவு 23.—(1) ஒவ்வொருவருக்கும் தமக்கு விருப்பமான வேலையில் அமர்வதற்கும், நலந்தரும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திலின்று தம்மைக் காப்பாற்றிக் கொள் வதற்கும் உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் எத்தகைய வேறுபாடுமின்றி தம் தம் வேலைக்கேற்ப ஊதியம் பெற உரிமையுண்டு.

(3) வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் தேவையானபோது சமுதாயப் பாதுகாப்பு அளிப்பதுடன் மக்கள் வாழ்க்கையின் மதிப்பிலே ஒவ்வொருவரும் அவரவர் குடும்பங்களும் வாழ்வதற்கேற்ற ஊதியம் பெறும் உரிமையுண்டு.

(4) ஒவ்வொருவருக்கும் தம் தம் நலனைக் காப்பாற்றிக் கொள்ள வணிகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்கும் அவற்றை அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 24. ஒவ்வொருவருக்கும் வேலை நேரத்தில் வரையரையும், ஓய்வும், விடுபாடும், காலத்திற்குக் காலம் ஊதியத்தோடு பெறும் விடு முறையும் அடைவதற்கு உரிமையுண்டு.

பிரிவு 25 —(1) உணவு, உடை, வீடு, வைத்திய பராமரிப்பு என்பன வற்றுடன் தேவையான சமுதாயச் சேவைகளையும் தானும் தன் குடும்ப

மும் ஆரோக்யமாக நல்வாழ்வு வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுதற்கும் வேலையின்மை, சுகவீனம் அங்கக்குறை, கைம் பெண்ணுதல், முதுமை அல்லது தன் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங் களினுல் ஊதியமின்மை ஏற்படும் காலத்தில் பாதுகாப்புப் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

(2) கர்பிணிகளும் சிசுக்களும் விசேஷ பாதுகாப்புக்கும் உதவிக்கும் உரிமை உடையவராவர். முறைப்படி விவாகமானவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளாயினும் அவர்கள் ஏற்றத் தாழ்வின்றி ஒரேவிதமான சமுதாயப் பாதுகாப்பினை அனுபவிக்க உரிமை உடையவர்களாவர்.

பிரிவு 26.—(1) ஒவ்வொருவருக்கும் படிப்பதற்கு உரிமையுண்டு. முதல் நிலை கல்வியும், அடிப்படைக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும். அடிப்படைக் கல்வி கட்டாயமாக வற்புறுத்தப்படும். பொதுவாக, தொழிற் கல்வியிலும் நுட்பக் கல்வியிலும் எல்லோருக்கும் சமமாக வாய்ப்பளிக்கப் படும். உயர்நிலை கல்வி தகுதியின் அடிப்படையிலே வழங்கப்படும்.

(2) அடிப்படை உரிமைகளையும், மனிதரது உரிமைகளின் மதிப் பையும் பெருக்கவும், மனிதரது பண்பாட்டை நிறைக்கவும் ஆன முறை யில் கல்வியின் போக்கு அமையும். அது ஒற்றுமையையும், நட்பையும் நாடுகளுக்குள்ளும் இனத்திற்குள்ளும், கூட்டத்திற்குள்ளும் வளர்த்து அமைதியை நிலைநாட்டும். ஐக்கிய நாட்டின் முயற்சியையும் ஓங்கச் செய்யும்.

(3) பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி வகையைப் பற்றி முன் கூட்டியே முடிவு செய்ய முழு உரிமையும் உண்டு.

பிரிவு 27.—(1) ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தின் கலை வாழ்விலே கலந்து கொள்வதற்கும், கலையிலே ஈடுபடுவதற்கும், அறிவியல் துறை முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்கும் அதன் பயனைப் பெறுவதற்கும் உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தங்களால் வெளியிடப்பட்ட அரசியல், விஞ்ஞான இலக்கிய உண்மைகளினுல் வரும் பெயரையும், பொருளையும் பாதுகாத்துக்கொள்ள உரிமையுண்டு.

பிரிவு 28. இந்த அறிக்கையில் கண்டபடி நாட்டிற்கும், உலகத்திற் கும் பொதுவான அமைப்புகளால் உரிமைகளை அடைவதற்கு, ஒவ்வொரு வருக்கும் உரிமையுண்டு.

பிரிவு 29.—(1) ஒவ்வொருவரதும் சுபாவம் கட்டுப்பாடின்றிப் பரி பூர்ணமாக அபிவிருத்தி யடைதற்குரிய ஒரே ஒரு சாதனம் அவரவரது சமூகமே ஆதலின், அவ்வச் சமூகத்துக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.

(2) ஒவ்வொருவரும் தன் தன் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்குங்கால் அவர்களது கருமங்களைக் கட்டுப்படுத்துவனவாய செயல்கள், மற்றவர்களது உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அளிக்க வேண்டிய கணிப்பினையும் மதிப்பினையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் மாத்திரம் சட்டபூர்வமாக நிருணயிக்கப்பட்டனவாயும், ஓர் சனநாயக சமுதாயத்தின் ஒழுக்கம், பொது சன அமைதி, பொதுச் சேமாபிவிருத்தி என்பவற்றுக்கு நீதி நியாயப்படி வேண்டிய அளவினவாயும் இருக்கும்.

(3) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்து நோக்கங்கள், கொள்கைகளுக்கு முரணாக இவ் வுரிமைகளையும் சுதந்திரங்களையும் எவ் விடயத்திலேனும் பிரயோகிக்க வொண்ணாது.

பிரிவு 30. இவ் வறிக்கையில் கண்ட உரிமைகளையோ, விடுதலைப் பேறுகளையோ அறிக்க வேண்டி எதனையேனும் செய்யவோ, அத்தகைய இயக்கத்தில் ஈடுபடவோ, எந்த நாட்டுக்கும், எந்த குழுவினுக்கும், எந்த மனிதனுக்கும் உரிமையளிக்கும் குறிப்புடையதாக இந்த அறிக்கையில் உள்ள எதற்கும் பொருள் செய்தலாகாது.

V1:5
N6091
ARCHIVES ... MADRAS
108840

UDHR-A Standard of Achievement-Tamil-59.
Printed at Girinath Power Press, 11, St. John's Road, Bangalore-1
Mysore State. 5000/11-59.

UNITED NATIONS SALES AGENTS

United Nations publications may be obtained in local currencies from authorized agents in more than sixty-five countries. Inquiries may be sent to: Sales Section, United Nations New York, or Sales Section, United Nations Office, Palais des Nations, Geneva, Switzerland. See below for partial list.

ARGENTINA: Editorial Sudamericana S.A., Alsina 500, Buenos Aires.

AUSTRALIA: H. A. Goddard, 50 Miller Street, North Sydney, and 90 Queen Street, Melbourne. Melbourne University Press, 369-371, Lonsdale Street, Melbourne C.1.

CANADA: The Ryerson Press, 299 Queen Street West, Toronto

DENMARK: Einar Munksgaard, Norregade 6, Kobenhavn, K.

INDIA: Orient Longmans, Calcutta, Bombay, Madras & New Delhi Oxford Book & Stationery Co., New Delhi and Calcutta; P. Varadachary & Co., Madras.

INDONESIA: Pembangunan Ltd., Gunung Sahari 84, Djakarta.

IRAQ: Mackenzie's Bookshop, Baghdad.

ISRAEL: Blumstein's Bookstores, Ltd., 35 Allenby Road, Tel-Aviv.

JAPAN: Maruzen Co., Ltd., 6 Tori Nichome, Nihonbashi, Tokyo.

NETHERLANDS: N.V. Martinus Nijhoff, Lange Voorhout 9, 's-Gravenhage.

NEW ZEALAND: United Nations Association of New Zealand, C.P.O. 1011, Wellington.

PAKISTAN: The Pakistan Co-operative Book Society, Dacca, East Pakistan. Publishers United, Ltd., Lahore. Thomas & Thomas, Karachi, 3.

PHILIPPINES: Alemar's Book Store, 749 Rizal Avenue, Manila.

SWEDEN: C. E. Fritze's Kungl., Hovbokhandel A-B, Fredsgatan 2, Stockholm.

THAILAND: Pramuan Mit Ltd., 55 Chakrawat Road, Wat Tuk, Bangkok.

UNION OF SOUTH AFRICA: Van Schaik's Bookstore (Pty.), Ltd, Box 724, Pretoria.

UNITED KINGDOM: H.M. Stationery Office, P. O. Box 569, London, S. E. 1. (and at H.M.S.O. shops).

UNITED STATES OF AMERICA: International Documents Service, Columbia University Press, 2960 Broadway, New York 27, New York